487

4877

REGISTERED No. M. 6165. ந. பை. 13

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 OCT 1957
MADRAS

நவம்பர்—1957.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| தெய்வக் கட்டளையும் மனிதர் கடமையும் ... ... | 1 |
| முஸ்லிம் மன்னரின் ஹிந்து ராணிகள் (டி. எப். ஆர். மஆலி ஸாஹிபு-பாகவி) ... ... | 7 |
| மாநிலம் மறக்க முடியாத மாவீரர் ... ... ... | 13 |
| செயற்கைச் "சந்திரனும்" இயற்கைச் சந்திரனும் (டி. எப். ஆர். மஆலி ஸாஹிபு-பாகவி) ... ... | 17 |
| திருக்குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... ... ... ... ... | 21 |
| சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர் ... ... ... ... | 25 |
| தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள் (ரஹ்மத் பாகவி) ... ... .... | 31 |


[illegible]ஹுல் இஸ்லாம் ஆபீஸ் :
[illegible] ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

JL
Q7ന211, N24 FI
N57.
(8)068

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1–50
தனிப் பிரதி நயா பைஸா. 13
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

## முதல்லல் கோஷா நாமா

(புதிய பதிப்பு)

கோஷா பர்தா விஷயத்தைப் பற்றி ஹக் தஆலாவின் கலாமாகிய தலீல்களிலும் நமது நபி நாயகமவர்களின் திரு மொழியாகிய ஹதீதுகளிலும் வந்திருப்பவைகளைக் கல்விக் கடல்களாகிய முஹத்திஸீன்களும், முபஸ்ஸிரீன்களும், முஜ் தஹிதீன்களும் தெண்டித்து விபரித்தெழுதி யிருப்பவை களில் சிலதை சுருக்கமாக சேகரித் தெழுதி முதல்லல் கோஷா நாமா வென்று பெயர் வைத்து தற்கால ஆலிம் மவ்லவிகளில் மஹான்களாகிய பத்து உலமாக்கள் பார்வை யிட்டு அச்சிடப் பட்டது. இவைகளெல்லாம் வசனமாகக் கூறப்பட்டு இருக் கின்றன.

பின்பு இவைகளெல்லாம் சுலபமாக மனதில் வைத்துக் கொள்ளும் பொருட்டு பாடல்களாக போடப்பட்டு இருக் கின்றன.

இதன் விலை அணா. 8

மேற்படி அறபுத் தமிழ் விலை அணா. 12

கிடைக்குமிடம்:–
**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.**
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

# பத்ஹுல் இஸ்லாம்

நவம்பர்—1957.


## தெய்வக் கட்டளையும் மனிதர் கடமையும்

ஆதிமனிதர் ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் காலம் முதல் நபிகள் நாயகர் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் காலம் வரை, அவ்வப்போது, கால தேச நிலைக்கேற்ப, எல்லாம் வல்ல இறைவனால் திருக்கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு, மாந்தர் அடியார்கள் அதனை அனுஷ்டித்து வந்துள்ளார்கள்.

ஆம். அக்காலம் தொடுத்து இக்காலம்வரை, ஆண்டவன் புறத்திலிருந்து அவ்வப்போது, தோன்றிய நபிமார்கள், ரஸூல்மார்கள், வழிகாட்டிகள், சீர்த்திருத்தகர்கள் ஆகியோரின் தொகை இலக்ஷத்து எண்பதினாயிரத்துக்கு மேலாகும். இவ்வாறே, இறைவன், அவ்வக் கால மனித சுபாவத்திற்கேற்ப, திருக்கட்டளைகள் என்னும் வேதங்களையும், ஆகமங்களையும், தூதர்கள் மூலம் அனுப்பி வைத்து, அதன்படி நடந்து சன்மார்க்கத்தில் ஒழுகி, நன்மை பெறுமாறு வற்புறுத்தி வந்துள்ளான்.

இங்ஙனம் இறைவனால் ஆதிகாலந் தொட்டு போதிக்கப்பட்டு வரும் திருக் கட்டளையை யொட்டிய சன்மார்க்கத்துக்குப் பெயர் 'இஸ்லாம்' என்பதாகும். இஸ்லாம் என்ற பதம் அரபிச் சொல்லாக இருப்பதால், அரபு நாட்டில் இறுதியில் தோன்றிய மதத்துக்கு மட்டும்தான் 'இஸ்லாம்' என்னும் பெயர் பொருந்தும் என்று ஒரு சிலர்

சொல்லலாம். உண்மை அதுவன்று. நம் ஆதி பிதா ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு, ஆண்டவன் போதித்திருந்த கட்டளைக்கும் பெயர் இஸ்லாம் தான். அதன் பின் ஹஜ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களுக்கு 'இன்ஜீல்' எனப்படும் வேதக் கட்டளை மூலம் போதிக்கப்பட்ட கட்டளைக்கும் பெயர் 'இஸ்லாம்' தான். ஹஜ்ரத் மூஸா நபிக்கும், ஹஜ்ரத் தாவூத் நபிக்கும் அளிக்கப்பட்ட கட்டளைகட்குப் பெயர் தவ்ராத், ஜபூர் என்று கூறப்பட்டாலும் அதுவும் இஸ்லாமே யாகும்.

'அல்லாஹ்' என்ற பதம், அரபு மொழியில் ஏக தெய்வமான ஒரே இறைவனைக் குறிப்பிடும் விழுமிய பொருள் நிறைந்த பதமாகும். வணக்கத்துக்குரிய இறைவன்—மாந்தர் யாவரும் யாரை வணங்குகிறார்களோ, யாரிடம் சகலத்திற்கும் உதவி தேடுகிறார்களோ, யாரிடம் சரணாகதி யடைகிறார்களோ, யாரை 'சர்வசக்தி வாய்ந்தவன்' என்று நம்பிக்கை கொண்டு தொழுது பணிகின்றார்களோ அந்த இறைவனுக்குப் பெயர்தான் 'அல்லாஹ்' என்பதாகும். எனவே, ஆதம் நபி கால மக்களும் முஹம்மத் நபி கால உம்மத்தும், அந்த அல்லாஹ்வையே வணங்கி வந்தனர்; வணங்கி வருகின்றனர்.

எனவே, 'இஸ்லாம்' என்ற பதமும் 'அல்லாஹ்' என்ற பதமும் பொதுப்படையானதாகும். உண்மையில், இஸ்லாம் என்பது மனிதர்களின் வாழ்க்கை முறைக்குத் திட்டம் வகுத்து வழி காட்டும் ஒரு செயல் முறைக்குப் பெயராகும். மனிதர்க்கு ஏற்ற அனுஷ்டான திட்டமே இஸ்லாம் மதம். இது மனிதர்களின் எண்ணங்களையும் செயல்களையும் சீர்திருத்தித் தூய்மை படுத்தி, அவர்களை ஆத்மார்த்தத் துறையில் பரிபக்குவ மடைய செய்வதற்காக இறைவனால் ஏற்படுத்தப்பட்ட சன்மார்க்க ரீதியாகும்.

இயற்கையாகவே மனிதன், தன் சுயேச்சைப்படி நடந்து கொள்ளும் சுபாவமுடையவனாக இருந்து வந்துள்ளான். ஒரு மனிதன் பிற மனிதனின் சொல்லை, எளிதில் ஏற்றுக் கொள்வதில்லை. அந்த சொல்லில் தனக்கு ஏதேனும் நன்மை இருக்கிறதா என்று உய்த்து உணர்ந்து பார்த்தே, அதில் அனுகூலம் இருந்தால் ஏற்றுக் கொள்வான்; இல்லா விட்டால் மறுத்து நிராகரித்து, சுயமனப் போக்கின்படி நடந்து கொள்வான்.

எனவே, மனிதர்களை யெல்லாம் ஒரே வித செயல் முறைத் திட்டத்தின் பிரகாரம் அழைத்துச் செல்லும் சன்மார்க்கத் தொண்டு,

சீர்திருத்தச் சேவை, ஆதிகாலந் தொட்டே நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு நபிமார்களும், ரஸூல்மார்களும் இந்தச் சேவையே செய்து வந்துள்ளார்கள்.

மனிதர்களிடையே நற்பிரசாரம் செய்வதற்கு, எல்லாம் வல்ல இறைவன், வானவர்களாகிய மலக்குகளை அனுப்பி வைக்கவில்லை; ஜின்களையும் ஷைத்தான்களையும் அனுப்பி வைக்க வில்லை. ஆனால், மனித இனத்தை சீர்திருத்த, மனிதர்களிலேயே ஒரு சிறந்தவரைத் தேர்ந்தெடுத்து, சீர்திருத்தகராய் நியமித்து வைத்தான்.

எனவே, மனுஷ்யத் தன்மையிலும், குண ஒழுக்கத்திலும் பக்தி வணக்கத்திலும், ஆத்ம விசாரத்திலும், செயல் முறையிலும் உலகானுபவத்திலும் எவர் சிரேஷ்டமானவராய் விளங்கினரோ, அவரையே ஆண்டவன், இதர மாந்தர்களின் சீர்திருத்தகராகவும் வழி காட்டியாகவும் நற்போதகராகவும் நியமனம் செய்து வைத்தான். அந்த உத்தம புருஷர், சகல நல்ல குணங்களும் நல்ல நடத்தைகளும் பொருந்தியவராய் இருந்து வந்ததோடு, தான் உபதேசித்த வண்ணம் சுயமே நடந்து நல்வழி காட்டக் கூடியவராய் இருந்துவந்துள்ளார். அவரது ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு செயலும், பிறருக்கு ஹிதாயத்தாகவும் வழிகாட்டியாகவும் அழகிய நமூனவாகவும் இருந்து வந்துள்ளன.

'தெய்வக் கட்டளை'யை நாம் 'கலாமுல்லாஹ்' (இறைவனின் திருச்சொல்) என்று கூறுகின்றோம். இறைவனின் திருக்கட்டளையை அக்தந்தக் கால நபிகள், அழகுற ஓதிக்காட்டி, அதனை விளக்கி வியாக்யானம் செய்து, மனிதர் உள்ளத்தில் நன்கு பதியவைத்தார்கள். அதை 'தீன்' என்றும் 'ஷரீஅத்' என்றும் விளக்கிச் சொன்னார்கள்.

எனவே, (1) அல்லாஹ், (2) இஸ்லாம் (3) தீன் (4) ஷரீஅத் என்ற பதங்கள் ஒரு காலத்துக்கோ, ஒரு தேசத்துக்கோ, ஒரு வர்க்கத்துக்கோ சொந்தமானவை யல்ல; அவை எல்லா காலத்துக்கும் எல்லா தேசத்துக்கும், எல்லா ஜனங்களுக்கும் பொதுவானதாகும். ஆதம் நபி முதல் ஈஸா நபிவரை, இதையே காலதேச சூழ் நிலைக்கேற்ப தம் தம் மக்களுக்கு, அவரவர் பாஷையில், தெய்வக்கட்டளையின் பெயரால் எடுத்துரைத்துப் போதித்து வந்துள்ளார்கள்.

நமது நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது காலத்துக்கு முன் இலக்ஷக்கணக்கான நபிமார்கள் தோன்றி, தெய்வத் திருக்கட்டளைகளாகிய தீனையும் ஷரீஅத்தையும்

போதித்துச் சென்றுள்ளார்கள்; ஆயினும் அவர்களுடைய ஷரீஅத்தும் தீனும் பரிபூரணமானதாய் இருக்கவில்லை; குறிப்பிட்ட சமூகத்துக்கு, குறிப்பிட்ட தேசத்துக்கு மட்டும் விசேஷமானவைகளாய் இருந்தன. எனவே, அவை பிறகு மாற்றப்பட்டும், திருத்தப்பட்டும், சில மறைந்தும் போய் விட்டன.

இன்றைக்கு சுமார் 1400 ஆண்டு முன், அரபு நாட்டில் எல்லாம் வல்ல இறைவன், தன்னுடைய பேரருள் என்னும் ரஹ்மத்தை பரிபூரணமாக, இந்தரணி வாழ் மக்களெல்லோருக்குமாக அருள் பாலித்து விட்டான். அதாவது, அரபுகளில் சிறந்தவரும் மனிதர்களில் உத்தமருமாகிய முஹம்மத் (ஸல்) அவர்கள் மூலம் பரிபூரணமான சன்மார்க்கத்தையும், நிரந்தரமான திருவேதத்தையும், சாஸ்வதமான ஷரீஅத்தையும் அருள் புரிந்தான். மேலும் அந்த மகான் முஹம்மத் (ஸல்) அவர்களை, உலகினர்க்கு இறுதி நபியாகவும், காத்தமுல் முர்ஸலீனாகவும் அனுப்பிவைத்தான். அதாவது அவர்கட்குப் பின் வேறெந்த நபியும் வந்து, சம்பூர்ண சன்மார்க்கத்தில் குழப்பத்தையோ பிரிவினையையோ உண்டாக்காதவாறு, அந்த இறுதி நபி போதித்த ஷரீஅத்தை பரிபூர்ணமாக்கி வைத்தான்.

" அல்யவ்ம அக்மல்து லகும் தீனகும்
வ அத்மம்து அலைக்கும் நிஃமத்தீ-
வரலீத்து லகுமுல் இஸ்லாம தீனு"

என்று இறைவன், நற்சாக்ஷி சன்னதும் அளித்துள்ளான். 'அதாவது: (1) இன்று நான் உங்கள் சன்மார்க்கத்தை (ஷரீஅத்தை) பரிபூரணமானதாகச் செய்துள்ளேன்; (2) உங்கள் மீது என்னுடைய அருள் பாக்கியத்தை முடிவானதாக அளித்து விட்டேன்; (3) உங்களுக்கு இஸ்லாமையே சன்மார்க்கமாக (தீனாக) பொருந்தி (ஏற்று)க் கொண்டேன்—என்று மூன்று விதமான நற்பாக்கியங்களை இறைவன், பரிபூர்ணமாய் கொடுத்து விட்டான்.

எனவே, இறைவனுடைய இறுதியான—பரிபூர்ணமான—முடிவான திருக்கட்டளை 'குர்ஆன்' ஷரீப் வாயிலாய், நமக்கு போதிக்கப்பட்டுள்ள தீனுல் இஸ்லாமேயாகும். இஸ்லாம் பரிபூர்ணமான ஷரீஅத்து ஆதலால், அதில் இனி எவ்விதமான மாறுதலோ சீர்திருத்தமோ பேதகமோ செய்யவேண்டிய அவசியமில்லை. இறுதி கால கியாமத்து, உலக முடிவு காலம்வரை, இஸ்லாம் மதமே நிலைத்திருந்து நன்கு துலங்கும்; இறைவனின் இறுதி வேதமாகிய குர்ஆன் ஷரீபே,

சர்வகால சாஸ்வதத் திருக்கட்டளையாக விளங்கும். இதை உலகினர்க்கு இணையில்லாத முறையில் எடுத்துரைத்து முடித்துச் சென்ற முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களே, சர்வ தேசத்துக்கும் சகல லோகத்துக்கும் சகல சமூகங்களுக்கும் பொதுவான கடைசி நபியாகவும், இணையிலா சீர்திருத்தகராகவும் விளங்குவார்கள்.

காத்தமுல் முர்ஸலீன், ரஹ்மத்துன்லில் ஆலமீன், நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது புனித ஜீவித காலம் சுமார் 1350 ஆண்டு முன்னரே முடிவடைந்துபோன போதிலும், அவர்களின் ஆன்மார்த்த ஜீவிதம் என்னும் ஷரீஅத்தின் நற்போதனை, உலக முடிவளவும் என்றென்றும் நீடித்து நிலைத்து இலங்கி, நானில மெங்கும் சுடர் ஒளிப் பரப்பிப் பிரகாசித்துக் கொண்டிருக்கிற தென்பதில் சந்தேகமே இல்லை.

தீனுல் இஸ்லாம் பரிபூரணமான சன்மார்க்கம் என்பதற்கு ஓர் அத்தாக்ஷி: அம்மார்க்கம் இன்று உலக மெல்லம், தேச மெல்லாம், நகர மெல்லாம், கிராம மெல்லாம் எங்கும் பரவி வியாபித்து பிரகாசித்து விளங்கி வருவதாகும்.

இஸ்லாத்தின் மற்றொரு பெரிய அத்தாக்ஷி: அதன் திருவேதமாகிய குர்ஆன் ஷரீபின் வியாபகமாகும். ஆண்டவன் திருக்கட்டளையாகிய குர்ஆன் ஷரீபின் வாக்கியங்கள், நபிகணாதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வாய் மூலம் அருளப்பட்ட காலத்தில், இக்காலத்தைப் போல் காகிதப் பிரசார எழுத்து சாதனங்கள் இருக்கவில்லை; அந்தக் காலம் சரித்திரமே எழுதி வைக்கப்படாத இருண்டதோர் காலமாய் இருந்தது. ஆயினும், இறைவனின் திருக்கட்டளை, மனிதச் சிரேஷ்டராகிய முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் திருவாய் மூலம் வெளிப்பட்டதும் அதனை இஸ்லாம் மத பக்த சிகாமணிகள் பசுமரத்தாணி போல், தங்கள் இருதயங்களில் பதிய வைத்து, மனப்பாடம் செய்து கொண்டனர். ஒன்றிரண்டு பேரல்ல, பல நூறு ஸஹாபாக்கள் என்னும் நபித் தோழன்மார்கள், அத்திருவேத மொழிகளை மனதில் பதிய வைத்துக் கொண்டு தினமும் அதனை ஓதிப் பாராயம் செய்து வந்தார்கள்.

'குர்ஆன்' என்ற பதத்துக்கு அர்த்தம் ஓதத் தகுந்தது, வாசித்தற்குரியது, ஓத வசதியானது என்றெல்லாம் பொருள்படும். ஆம், அன்று தொடுத்து இன்று வரை, ஒன்றரை ஆயிரமாண்டு காலம், முஸ்லிம் மக்கள் பல கோடிப் பேர்கள், அனுதினமும் காலையும்

மாலையும் அந்தியும் சந்தியும் திருக்குர்ஆன் வசனங்களை வாசித்துக் கொண்டும், ஓதிக் கொண்டும்தா னிருக்கிறார்கள். காகித அச்சு வசதிகளே இல்லாதிருந்த அந்தக் காலம் தொடுத்து, மணிக்குப் பல்லாயிரம் பிரதிகளை அச்சிட்டு வெளிப்படுத்தும் அச்சு இயந்திர சாதனங்கள் மலிந்த இந்தக் காலம் வரை, குர்ஆன் ஷரீபுக்கு முன் னிருந்த மகிமையே நீடித்திருந்து வருகிறது.

உலகத்தின் எந்த தேசத்திலும் எந்த திக்கிலும், எந்த ஊரிலும் சென்று பார்த்த போதிலும் சரி, குர்ஆனின் அட்சரங்களில் ஒரு மாறு தலும் ஒரு சிறிய பேதகமு மில்லாமல், ஒரே மாதிரியாக ஓதப்பட்டு வருவதைக் கேட்கலாம். ஆண்டுக்கோர் முறையேனும், முஸ்லிம்கள் புனித ரமலான் மாதத் தொழுகையில் (தராவீஹில்), குர்ஆன் ஷரீப் முழுவதையும் ஓதக் கேட்கும் பழக்கம் உடையவர்களாய் இருந்து வருகிறார்கள்.

திருக்குர்ஆனில் 30 பாகங்கள், 114 அத்தியாயங்கள், 6666 வாக்கியங்கள் இருக்கின்றன. இத்தனை அம்சங்களை மனப்பாடம் செய்து, ஓர் எழுத்தும் பிழைபடா வண்ணம் அழகுடன் ஓதிக்காட்டும் ஹாபிஸ், காரீ ஸாஹிப்கள் பல்லாயிரம் பேர், இஸ்லாமிய உலகில் இருந்து வருகிறார்கள். இந்தப் பெருமை, இஸ்லாம் மதத்தினர்க்கு மட்டுமே உரித்தாய் இருந்து வருகிறது.

இஸ்லாத்துக்கும் முஸ்லிம் சமூகத்துக்கு மட்டும் இந்த மகிமை உண்டென்றால், இது 'இஸ்லாம் சத்திய சன்மார்க்கம்' 'குர்ஆன் சத்திய வேதம்' என்பதையே எடுத்துக் காட்டுகிறது. இதே விதமாக இஸ்லாத்தின் மக்கள், தங்கள் திரு நபியின் திருவாக்கியங்களான ஹதீதுகளையும் மனனம் செய்தும், எழுதி வைத்தும், ஆதார பூர்வமாய் காப்பாற்றி, ஓதி உணர்ந்து அமல் செய்து வருகிறார்கள்.

இறைவனின் திருக் கட்டளையைக் காப்பாற்றி, அதை உலக மெல்லாம் பரத்தி நற்பிரசாரம் செய்வதில், நம் முஸ்லிம்கள் தங்கள் கடமையை நல்ல விதமாகவே ஓரளவு நிறை வேற்றி வருகிறார்கள். இன்னும் நல்ல முறையில், விசாலமான வகையில், குர்ஆன் பிரசார மும் இஸ்லாம் பிரசாரமும் நடைபெற வேண்டும். தலைவர்களும், பிரமுகர்களும் தான் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டு மென் றில்லாமல், மனிதராய் விளங்கும் ஒவ்வொரு முஸ்லிமும் இதைத் தன் கடமை என்று உணர்ந்து, இஷாஅத்து துறையிலும், தப்லீக் முறை யிலும் நற்பிரசாரம் செய்து, இகபர நற்பயன்களைப் பெற்று உய்வார்க ளாக. வஸ்ஸலாம்.

# முஸ்லிம் மன்னரின் ஹிந்து ராணிகள்

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

## (1)

### உதயபூரி பாய்

**முன்னுரை :**—சுமார் 150 வருஷ காலம் இந்துஸ்தான் எனும் இந்த பாரத நாட்டை ஆண்டு அரசாக்ஷி செலுத்தி வந்த முகலாய முஸ்லிம் மன்னர்களை, உலக சரித்திரம் உலகம் உள்ளளவும் ஒருகாலும் மறக்காது. அந்த முஸ்லிம்கள், தமது வீரப் பிரதாபத்தாலும், தான தர்மச் செயல்களாலும், அன்பு விசுவாசத்தாலும் இந்த நாட்டு ஹிந்து பிரஜைகளின் உள்ளங்களில் குடி கொண்டிருந்தார்கள். ஒரு சில முகல் மன்னர்களின் நாடாளும் கடும் முறையானது, ராஜபுத்தர், மராட்டியர் போன்ற சில ஹிந்துக்களின் கோபத்துக்கும் எதிர்ப்புக்கும் இலக்காகி சீரழிந்ததும் உண்டு. ஆயினும் பெரும்பாலும் முகலாய முஸ்லிம் மன்னர்கள், அன்பினாலும் ஆதரவினாலும், சில ஹிந்துப் பெண்களை ராணிகளாக (பேகம்களாக) அடையும் பாக்கியமும் பெற்றனர். இதை, அந்த ரஜபுத்த, மராட்டிய வீரதீர மங்கைகளின் வெற்றி என்றும் சொல்லலாம். அந்த அழகியரில் பலர், தங்கள் ரூப லாவண்யத்தாலும், தைரிய சாகஸங்களினாலும், பேச்சு வன்மையினாலும் முஸ்லிம் வீர வேந்தர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டனர். அவ்வழகு மணிகளின் கடைக்கண் பார்வைக்குச் சில, முகலாயப் போர் வீரர்களும், சேனாதிபதிகளும் பலியாயினர். சில முஸ்லிக்கள், தாங்கள் மகா வீர தீரத்தோடு போர் புரிந்து, படைகளத்தில் ஜயக்கொடி நாட்டி, நாட்டில் பிரவேசித்து, ஜயபேரிகை முழங்கியபோது, கைதிகளாகப் பிடிப்பட்ட வீரப் பெண்களில் சிலரை தங்கள் அந்தப்புர அழகு ராணிகளாகவும் ஏற்றுக்கொண்டு ஆதரித்தனர். முகல் மன்னர்களின் இந்த உதார்-தாராளத் தன்மையைக் கண் டனுபவித்த சில ஹிந்துப் பெண்மணிகள் (ராணிகள்), மனப் பூர்வமாய் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு பேகம்களாகவும் மாறினர். அப்படிப்பட்ட சில பெண்ணரசிகளின் வரலாறுகளை இங்கு எடுத்துரைக்கின்றேன்.

### உதயபூரிபாயும் அவ்ரங்கஜேபும்

உதயபூரை ஆண்டுக் கொண்டிருந்த சிற்றரசரின் மகள் பெயரும் **உதயபூரி பாய்** என்றே விளங்கிற்று. ரஜபுத்தர்களில் நல்ல குலக்

கொழுந்தாயும், அழகிற் சிறந்த ரூபவதியாயும் விளங்கினுள் உதயபூரி பாய். உதயபூரி பாய், மஹாராஜாவுக்கு ஒரே குமாரி. ஆதலில், மிகச் செல்லமாகவும் சொகுசாகவும் வளர்ந்தவள் உதயபூரி பாய்.

உதயபூரி பாய், மங்கைப் பிராயம் அடைந்தபோது முன்னிலும் அதிக ரூபலாவண்ய முடையவளாய் விளங்கினுள். இவளது அழகு சௌந்தர்யத்தைப் பற்றியும், புத்தி சாதுர்யத்தைப் பற்றியும் கேள்விப் பட்ட-அறிந்திருந்த சிற்றரசர் பலரும், யுவராஜர்கள் பலரும் இவளை மணந்து கொள்ள வேண்டுமென்று ஆசைபட்டு முயன்றனர். இந்தக் குல தீபம், என் இல்லத்திற்கு சுடர் தாராதா என்று ஏங்கினர் பலர்; இந்த அழகு மலர் என் தலைப்பாகையை அலங்கரிக்காதா என்று ஏங்கினர் பலர். ஆனல், அந்த வனிதாமணியின் பாக்கியத்தில் விதி என்ன எழுதியிருக்கிற தென்று அவர்களுக்கென்ன தெரியும்? உதயபூரி பாய் பிற்காலத்தில் முகலாய மாவேந்தர் ஒருவரின் ஹிருதயாசனத்தில் அமர்ந்து, ராணியாகவும் பேகமாகவும் விளங்கி, இஸ்லாமிய சம்பிர தாயப்படி ஈமான் கொண்டு, முஸ்லிமாக விளங்கப்போகிருள் என்பது அப்போது யாருக்குத் தெரியும்?

அழகி உதயபூரி பாய், மங்கைப் பிராயம் எய்தி பல ஆண்டு வரை, மணவினை ஏற்காமலேயே வாழ்ந்து வந்தாள். அவளுக்கு வயது இருபத்தி ஐந்து பூர்த்தியாகியும் அவளுக்கு கல்யாணமாக வில்லை. முள்ளுள்ள இந்த ரோஜா மலரை, பலவந்தமாக பறித்துக் கொள்ள எந்த ரஜ்புத்ர, மராட்டிய வீர வேந்தனும் துணியவில்லை. காரணம்-மங்கை உதயபூரி பாயை அவளது தந்தை மிகச் செல்லமாய், அவள் இஷ்டம்போல், போற்றிப் பாராட்டி வளர்த்து வந்ததுதான்.

'மணந்து கொள்கிறேம்' என பல யுவர்களிட மிருந்து விண்ணப் பங்கள் பல வந்தன வெனினும், அவைகளை யெல்லாம் பார்த்து முடிவு செய்யும் பொறுப்பை, தந்தை, தானே ஏற்றுக் கொள்ளாமல் அவை களை யெல்லாம், தன் மகள் உதயபூரியிடமே கொடுத்து விடுவார். அவள் ஏதேனும் காரணம் சொல்லி நிராகரித்து விட்டு, 25 வயது வரை, மணப் பற்றின்றியே வாழ்ந்து வந்தாள்.

அவள் ஓர் சுடர் விளக்காக எரிந்து கொண்டிருந்தாள். விட்டிற் பூச்சிகள் பல, அந்த தீபத்தை தேடி வந்தடைந்தன. எனினும், ஒரு பூச்சியையும் அந்த விளக்கு தன் ஆதரிப்பில் ஏற்றுக் கொள்ள வில்லை. கண் மூடித்தனமாய் சுடர் விளக்குத் திரியில் போய் விழும் விட் டிற் பூச்சுகளின் முடிவு யாதாகு மென்பது தெரிந்த விஷயம் தானே!

## போராட்டத் தீ மூண்டது.

உதயபூரிபாய் அழகு சௌந்தர்யத்தில் மட்டும் தான் சிறந்தவ ளாய் இருந்தாள் என்றெண்ண வேண்டாம். வீரதீரப் பராக்கிரமத்

திலும் சிறந்திருந்தாள். குதிரை மீதேறி, கனவேகமாய் சவாரி செய்வாள். ஆண் வீரர்களுக்கு சரிசமானமாய் நின்று, வாளேந்தி தீரத்தோடு போர் புரிவாள். பந்தயமும் விளையாடுவாள். வேலையில்லாத நேரங்களில் குதிரை மீதேறி வனங்களையும் தோப்புத் துறவுகளை யும் சுற்றி வருவாள். தந்தைக்குத் துணையாக சில சமயங்களில், போர்க்களத்திலும் போய், கூரிய வாளேந்திப் போர்த் தொடுத் துள்ளாள்.

அந்தக் காலத்தில் முகலாயப் பிரபல மன்னர் அவுரங்கஜேபுடைய ஆட்சி முறை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவுரங்கஜேப் மன்னர், தக்ஷிண (தக்காணப்) பிரதேசத்து யுத்த காரியங்களை யெல்லாம் வெற்றிகரமாய் முடித்துக் கொண்ட பின், ரஜ்புத்தர்—சிற்றரசர்—புரட்சிக்காரர்கள் பக்கம் கவனம் செலுத்தலானார். இந்தச் சில்லரை ஆசாமிகளால், முகலாய வேந்தருக்கு பலப்பல சமயம் பல இடையூறுகள் உண்டாய் வந்தன.

முதன் முதலாய், அஜ்மீரில் கடுமையான போர் நிகழ்ந்தது. அஜ்மீரில் ஜெயம் கிடைத்த பின் அவுரங்கஜேப், ஜோத்பூர் பக்கம் போனார். அங்கும் வெற்றி கண்ட பிறகு, ரஜ்வார் என்னும் சில்லரை அதிகாரிகள்-புரட்சிக்காரத் தலைவர்களின் கொட்டத்தை அடக்க புறப்பட்டார். இவ்வாறாக, சிற்றரசர்களை வேட்டையாடிக் கொண்டே உதயபூர் வந்து சேர்ந்தார். அங்கு தான் நம் கதாநாயகி உதயபூரிபாயின் தந்தை இருந்தது.

அவ்ரங்கஜேப் பாதுஷா படையெடுத்து வருகிறார் என்று அறிந்ததும், உதயபூரி மகாராஜா, தாழ்மையாக ஒரு விண்ணப்பம் எழுதி அனுப்பினார். அதில் அவர், மன்னர் அவ்ரங்கஜேபிடம் "தயவு செய்து என்னுடைய பழைய புரட்சிக்காரியங்களை யெல்லாம் மறந்து விடுங்கள். என்னை மன்னித்து விடுங்கள். இனி மேல் நான் தங்களுக்கு முற்றும் பணிந்து நடந்து கொள்கிறேன். எனது முற்பிழை களுக்கு அபராதமாக சில பர்கனா (ஊர்)களை 'ஜிஸ்யா'வாக உங்க ளிடம் ஒப்படைக்கிறேன்" என்று எழுதி யிருந்தார்.

இரக்க மனமுள்ள ஔரங்கஜேப், அங்ஙனமே ராஜாவை மன் னித்து, விட்டுக் கொடுத்து விட்டார். மனதில் விரோதம் வைக்க வில்லை. சில நாட்கள் சென்ற பின், அந்த ராணா உதயபூரி ராஜா, புரட்சி கரமாய் பெரும்படைகளை சேர்த்துக் கொண்டு, அவ்ரங்கஜேபை எதிர்க்க முனைந்து விட்டான். இங்ஙனம் ஒரு அற்ப சிற்றரசன் தன் மகா அரசாங்கத்தை எதிர்க்கத் துணிந்ததையும், தனக்கு அளித் திருந்த வாக்குறுதியை மீறி நடந்து கொண்டதையும் கண்ட அவுரங்க ஜேபுக்கு தீராக் கோபம் மூண்டெழுந்தது. எனவே, தாக்குதலுக்கு தகுந்த ஏற்பாடு செய்தார்.

முஹம்மத் முஅஜ்ஜம் ஷா, முஹம்மத் ஆஜம் ஷா என்ற இரு வீரப் புதல்வர்களுக்கு தாக்கிது அனுப்பினர். ஒருவர் 'தக்காணத்து'க்கும் மற்றவர் 'பங்களா'வுக்கும் சேனதிபதிகளாய் இருந்தனர். 'பர்மான்' என்னும் அரசாக்கினை கிடைத்ததும், அவ்விருவரும் படையெடுத்துச் சென்றனர்.

மேலும், அவ்ரங்கஜேப், தம்முடைய இளவரசனான முஹம்மத் அக்பரை அழைத்து, நேரடியாக அந்த ராஜாவிடம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் படி உத்தரவு விட்டார்.

## கடும் போரில் தோல்வி

முப்புறம் தாக்குதல்கள் நடைபெற்றன. இளவரசர் முஅஜ்ஜம்ஷா, உஜ்ஜைன் பக்கமாக வந்து தாக்கினர். பிறகு 'ஆனுஸாகர்' பக்கமாக படைகளைத் திருப்பி, தம் படைகளையும் உதயபூரி ராஜாவுக்கு எதிராக தூண்டி அனுப்பினர். இங்ஙனம் மகாராஜாவை, முஸ்லிம் முகலாயப் பட்டாளங்கள் சூழ்ந்து கொண்டன. பெரும்படைகள் சிறு படையை, மலைப்பாம்பு தவளையை விழுங்குவதைப் போல் விழுங்கின.

ராஜாவுடைய படைகளில் 50 ஆயிரம் ரஜ்புத்தர்கள் போர்க் கோலம் தாங்கி, போர்க்களத்தில் பிரவேசித்து, அவ்ரங்கஜேபின் படைகளை எதிர்க்கவும் பலியாகவும் தயாரா இருந்தனர். உதிரம் கொதித்து ரோஷத்துடன் ஒவ்வொரு ரஜ்புத்த வீரனும், தன் ராஜாவுக்காக போரிட்டு மடிந்தனன். வீரமும் தீரமும் என்னதானிருந்து என்ன பயன்? பெரிய பாதுஷாவின் சேனை சமுத்திர வெள்ளத்தில் மூழ்கினர். இஸ்லாமியப் படைவெள்ளம், ரஜ்புத்தச் சிலைகளை அடித்துக் கொண்டு போய் விட்டது. உதயபூர் ராஜாவுக்கு தோல்வி ஏற்பட்டது.

ரஜ்புத்தச் சேனைகளை கொன்று குவிக்குமாறும், கொஞ்சமும் இரக்கம் காட்டக் கூடாதென்றும் அவ்ரங்கஜேப், கட்டளை யிட்டிருந்தார். அவ்வாறே நிகழ்ந்தது. எங்கும் இரத்த வெள்ளம். எங்கும் பிணக்காடு. ரஜ்புத்த வீரர்களின் அணி நிலைகுலைந்தது. ஒரு சிலரே உயிர்தப்பி ஓடினர். பெரும்பாலோர் வீரத்துடன் போராடி புகழ் உடம் பெய்தினர்.

## குடும்பமே கைதி

முகலாயப் படைகள் நாலா பக்கமும் உதயபுரியை சூழ்ந்து கொண்டன. ராஜாவுடைய குடும்பத்தினர் அனைவரும் சிறை பிடிக்கப்பட்டு, கைதியாயினர். அக்கைதிகளில் ஒரு உருவம் 'வீர மங்கை' பாயாக விளங்கினள்.

மன்னர் அவ்ரங்கஜேபுடைய தர்பாரில் ராஜகுலக் கைதிகள் கொண்டுபோய் நிறுத்தப் பட்டனர். அதில் அழகி வீராங்கனை

உதயபூரி பாய், பகல் சூரியன்போல் துலங்கிக் கொண்டிருந்தாள். மாமன்னர் அவ்ரங்கஜேபுடைய பார்வை, அந்த அழகுராணி மீது விழுந்தது. மன்னர் பேரழகில் மூழ்கி சிறிதுநேரம் தன்னை மறந்தார்.

அழகுக்கு முன் அகங்காரமும் பணிய வேண்டியதுதானே! அப் பெண்மணியின் அழகு சௌந்தர்யத்தைப் பற்றி முன்னரே கேள்விப் பட்டிருந்தார் மன்னர் அவ்ரங்கஜேப். எனவே, அழகிய ரூபவதியின் நிலைமைக்கு மிகவும் இரக்கப்பட்டார். இப்படிப்பட்ட அழகியை அரண்மனையில் வைத்து ஆதரிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்.

## இஸ்லாத்திற் சேர்ந்தாள் அணங்கு

மன்னர் மனது வைத்தால் என்னதான் நடக்காது! ராணி ரூபவதி உதயபூரி பாய் மன்னிக்கப்பட்டு, அரண்மனையின் அந்தப்புரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அவள் பாக்யம் விழித்துக் கொண்டது. வருங்காலம் அவள் மனதைத் திறந்து காட்டியது.

சின்னாளில் உதயபூரி பாய், மனப்பூர்வமாய் இஸ்லாம் மதத்திற் சேர்ந்து, முஸ்லிம் பேகமாக விளங்கினாள். அவளுக்கு அரண்மனை வாழ்க்கை பிடித்துப்போய் விட்டது. குர்ஆன் ஷரீப் ஓதக் கற்றாள். அரபி, பார்ஸி பாஷையும், துருக்கி மொழியும் கற்றாள். மன்னர் அவ்ரங்கஜேபுடைய ஹிருதய ஆசனத்தில் ராணியாக (பேகமாக) வீற்று ஆட்சி செலுத்தினாள். இவளுக்கொரு ஆண்பிள்ளை பிறந்தது. பெயர் இளவரசன் காம்பக்ஷ் என்பதாகும். அவ்ரங்கஜேப் இறந்து போன மறு வருஷமே இந்த மலரும் வாடி வதங்கி மண்ணுக் கிரையாயிற்று


# உர்தூ ஆஸான்

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியரின்றி 20 நாட்களுக்குள் உர்தூ பாஷையை பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள ஏதுவான புஸ்தகம் இது ஒன்றே. இன்றே ஒரு உர்தூ ஆஸான் புஸ்தகத்தை வாங்கி இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்துவைக் கற்றுக் கொள்ளுங்கள்.

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 256 பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 3–00

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# 1958-வது வருஷத்தின்

## ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர்

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள் ளன. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகை களின் நேரங்களாகிய அவ்காதுஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. இவை சொற்ப காலண்டர்களே அச்சிட்டு வருவதால் ஜனவரி-மீ வருவதற்குள் செலவாகி விடுவது சகஜம். ஆதலால் தங்களுக்குத் தேவையுள்ள காலண்டர்களுக்கு நவம்பர் மாதத்திலேயே ஆடர் செய்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு காலண்டர் விலை ந பை. 0-75

நூறு காலண்டர் விலை ரூ. 60-00

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
ஹமீதிய்யா பில்டிங்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# மாநிலம் மறக்க முடியாத மாவீரர்

அவர் இறந்து இருபத்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. ஆயினும், ஆயிரம் வழிகளிலே அவனியிலுள்ளோரின் அன்றாட வாழ்க்கையினொரு அங்கமாக அவர் இருந்து வருகிறார்.

டெலிவிஷன் நிகழ்ச்சிகளை நிதம் கண்டு களிப்படையும்போதும், ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்டு ஆனந்தம் கொள்ளும்போதும், தந்திச் செய்தி அனுப்பும்போதும், டைப்ரைட்டரை உபயோகிக்கும் போதும், டெலிபோன் மூலம் நினைத்தபோது நினைத்த நபருடன் நண்பருடன் அளவளாவி அகமகிழ்ச்சி அடையும்போதும், தியேட்டருக்குச் சென்று திரைப்படக் காட்சியைக் கண்டு களிபேருவகை எய்தும்போதும், கிராமபோன் ரிகார்டு வைத்து இன்னிசை கேட்டு இன்புறும்போதும், மின்சார விளக்கை பொருத்தும்போதும் அவரை நாம் மறக்க முடியாது. அவருக்கு நாம் நன்றி செலுத்தவும், அவரது அபார திறமையை, அரும்பெரும் சேவையைப் பாராட்டவும் கடமைப் பட்டிருக்கிறோம்.

நானிலத்தவருக்கு நவீன வசதிகள் செய்து வாழ்க்கை வளம் பெற செய்த அந்த வள்ளலின் பெயர் என்ன தெரியுமா? அதுதான் **தாமஸ் ஆல்வா எடிசன்.** அவனியிலே அறிவிற் சிறந்த மேதைகள் வாழ்ந்த காலத்திலும்கூட அவர் பிரபல்ய மடைந்து பிரசித்திப் பெற்று விளங்கினார்.

சாமுவேல் எடிசன் என்பவருக்கு ஆறாவது குழந்தையாக ஓஹியோவிலுள்ள மிலானில் 1847-ம் வருடம் அவர் அவதரித்தார். தட்டுத் தடுமாறி தள்ளாடி நடமாட ஆரம்பித்த சமயத்திலிருந்தே அவர் அசாதாரண இளைஞராக இருந்தார். ஒரு நாள் மாலை அயல் அகத்தாரின் தோட்டத்திலே வாத்து முட்டைக் கூட்டின்மீது மிகப் பொறுமையாக அவர் அமர்ந்திருந்ததை அவரது பெற்றோர் கண்டார்கள். பத்துமணி நேரம் வரை அவர் அங்கு அமர்ந்திருந்தார். அதன் காரணமாக கடும் குளிரால் அவர் உடல் சிலிர்த்துப் போயிருந்தது. அவரது அடாத செயலைக் கண்ட முதியோர் அவரை இல்லத்துக்கு இழுத்துச் சென்றனர். அச்செயலை அழுத்தம் திருத்தமாக ஆக்ஷேபித்தார் அந்த ஐந்து வயதுப் பாலகர்.

"என்னால் குஞ்சு பொறிக்க முடியும். என்னால் குஞ்சு பொறிக்க முடியும் யென்பது எனக்குத் தெரியும்" என்ற வார்த்தைகள் அவரது வாயிலிருந்து வெளிவந்தன. மறுநாள் சூரியோதய வேளையிலே முட்டைக் கூட்டின் மீது அவர் அமர்ந்து கொண்டார். அவரது

பிற்கால வாழ்வு முழுவதும் குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்கிய முரட்டுப் பிடிவாதத்துக்கு இச்செயல் அஸ்திவாரம் போலும்.

அவருக்கு ஏழு வயதான சமயத்திலே மிச்சிகனிலுள்ள போர்ட் ஹூரானுக்கு அவரது குடும்பத்தார் இடம் பெயர்ந்து சென்றார்கள். இந்த இடத்தில்தான் இவர் சரித்திரம் கண்டிராத மிகக் குறுகிய காலக் கல்வி பெற்றார். இரண்டு மாதப் படிப்புக்கு பின்னர் அவரது ஆசிரியர் அவரது அன்னையை அணுகி பின் வருமாறு கூறினர் :—

"நான் வருந்துகிறேன். ஆயினும் என்ன செய்வது? உங்கள் மைந்தன் மிகவும் பிற்போக்காகக் காணப்படுகிறான். கல்வி கற்றுக் கொள்ள வேண்டுமென்ற விருப்பமே அவனுக்கு இல்லை."

இவ்வார்த்தைகளைச் செவியுற்றதும் நான்ஸி எடிசன் நவின்றதாவது: "முட்டாள் தனமாகப் பேசுகிறீர். டாம் அறிவிற் சிறந்த பையன். அவனுக்கு நானே பாடம் படித்துக் கொடுப்பேன்."

வாஷிங்டனின் தலைமையில் சமர் புரிந்துள்ளவரும், கனெக்டிகட்டைச் சேர்ந்தவருமான காப்டன் எபிநெசர் எலியட்டின் பேத்தி நான்ஸி எடிசன். அவளொரு அசாதாரண அணங்கு. அவளது அருமந்த மைந்தர் அசாதாரண கல்வி பெற்றார். எடிசனுக்கு எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடுத்த பிறகு, மைந்தன் தனது இஷ்டப்படி நடக்க அவள் விட்டு விட்டாள். பத்து வயதாவதற்கு முன் ரிச்சர்டு கிரீன் பார்க்கர் எழுதிய 'இயற்கை தத்துவார்த்தப் பாடசாலை' என்னும் புத்தகத்தையும், கிப்பன் வரைந்த 'ரோம சாம்ராஜ்யத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்' என்ற நூலையும், 'விஞ்ஞானங்களின் அகராதி' என்னும் புஸ்தகத்தையும், ஸியர் எழுதிய 'அவனியின் அற்புதங்கள்' என்னும் நூலையும் அவர் படிக்க ஆரம்பித்து விட்டார்.

பரிசோதனையை நடத்துமாறு இளைஞரைத் தூண்டியது பார்க்கரின் புத்தகம். பண்ணையைச் சேர்ந்தாற் போலிருந்த அவரது வீட்டின் அறை, படிப்படியாக ஆராய்ச்சிக் கூடமாக மாறியது. நூற்றுக் கணக்கான ஜாடிகளும், புட்டிகளும் அந்த ஆராய்ச்சிக் கூடத்திலே குவிய ஆரம்பித்தன. சாமுவேல் மார்ஸின் சமீபத்திய கண்டு பிடிப்பு பற்றிய வர்ணனை விவரம், இளம் எடிசனின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. தந்தி அனுப்பும் சாதனம் இயங்கும் விதம், தந்திக்கம்பி மார்க்கங்களை நிர்மாணிப்பது முதலிய விஷயங்கள் அவருக்குப் புரியாத புதிராக விருந்தன. எனவே, இவ்விஷயங்களில் தெளிவு பெறுவதற்காக அவர் கடுமையாக உழைக்கலானர்.

பன்னிரண்டாம் வயது வந்ததும் பணம் சம்பந்தப்பட்ட வரை சுதந்திரம், சுயேச்சை அடைவதென அவர் உறுதி கொண்டார்.

அவரது ஆராய்ச்சிக் கூடத்துக்கு விலையுயர்ந்த தளவாடங்களும், சாதனங்களும் தேவைப்பட்டன. புதிய விஞ்ஞானப் புத்தகங்கள் வெளியான உடனே அவற்றை அவர் வாங்கிப் படிக்கலானர். இவ்வாருக, விஞ்ஞான ஆராய்ச்சியில் எடிசன் ஈடுபட்டார். போர்ட் ஹூரானுக்கும், டெட்ராயிட்டுக்கும் இடையே தினசரி சென்று வந்து கொண்டிருந்த ரயில் பாதை மார்க்கத்திலே, இனிப்புப் பண்டங்களும் பத்திரிகைகளும் விற்பனை செய்யும் உரிமையை 'கிராண்டிரங்க் ரயில்வே' யிட மிருந்து அவர் பெற்றுக் கொண்டார்.

டெட்ராயிட்டிலே பத்திரிகைகள் விற்பனை செய்த சமயம் தவிர, மற்ற சமயங்களில் இளைஞர் சங்கத்தின் வாசக சாலைகளுக்குச் சென்று படிக்கலானர். விரைவாகப் புத்தகங்களைக் படிக்கவும், மாலை நேரத்திலே பல புத்தகங்களை படித்து முடித்து முக்கிய தகவல்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும் அவர் ஏற்கனவே பழகி யிருந்தார். அவரது ஞாபக சக்தி அபாரமானது. அகர வரிசைக் கிரமமாகப் புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்த அவர் அந்த நூல் நிலையத்திலிருந்த பதினாயிரம் நூல்களையும் படித்து முடித்து விடுவதென தீர்மானித்தார்.

அவரது வியாபாரம் விருத்தியடைந்தது. மூன்று வருடங்களுக்குள் அவர் அதனை விஸ்தரித்துக் கொண்டார். மற்ற ரயில் வண்டிகளிலே பத்திரிகைகள் விற்பதற்கென சிறுவர்களைக் கூலிக்கு அமர்த்தி, காய்கறி, பழ வியாபாரத்தையும் துவங்கினர்.

போர்ட் ஹூரானுக்கும் டெட்ராயிட்டுக்கும் இடையேயுள்ள அறுபத்து மூன்று மைல் நீள மார்க்கத்தில் வேலை செய்த தந்தி குமாஸ்தாக்கள், ஸ்டேஷன் கூலியாட்கள், இதர ரயில் சிப்பந்திகள் ஆகியோருடன் அவர் சிநேகம் செய்து கொண்டார். வெண்ணெய், பழவகைகள், காய்கறிகள் ஆகியவற்றை அடக்க விலைக்கே விற்பனை செய்து அன்றைய விற்பனையில் எஞ்சி யிருந்த சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் படிக்கக் கொடுத்து அவர்களுடைய குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்களும் வழங்கினர். இதற்குக் கைமாருக அவர்களும் அநேக வழிகளில் அவருக்கு உபகாரம் புரிந்தனர்.

அமெரிக்க உள்நாட்டு யுத்தம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பெரும்போர்கள் நிகழ்ந்த போது எடிசனின் டெட்ராயிட் பத்திரிகைகள் அதிகம் விற்பனையாயின. 1862-ம் வருடம் ஏப்ரல் மாதம் ஷிலோ என்னும் இடத்தில் பெரும்போர் நிகழ்ந்தது. அப்போர் நிலவரத்தையும் விவரத்தையும் விளக்கிய தகவல் டெட்ராயிட் "ப்ரீ பிரஸ்"ஸில் பிரமாதமாகப் பிரசுரமாயிற்று. எடிசன் தந்தி அலுவலகத்திற்கு விரைந்து தமது மார்க்கத்தி லிருந்த ஸ்டேஷன்களுக்குப் போர் பற்றிய தகவலின் தலைப்பைத் தந்தி மூலம் அனுப்பி வைக்குமாறு தந்தி குமஸ்தாவை தூண்டினர்.

சிநேக பாவம் கொண்ட ஸ்டேஷன் ஏஜெண்டுகள் அவர்களது அறிவிப்புப் பலகைகளில் இத்தலைப்பை எழுதி விளம்பரப் படுத்தி விடுவார்கள், என்பது அவருக்குத் தெரியும். இந்த ஏற்பாட்டைச் செய்து முடித்ததும் "ப்ரீ பிரஸ்" அலுவலகத்துக்குச் சென்று ஆயிரம் பத்திரிகைப் பிரதிகள் வேண்டு மென்றார்.

ஆயிரம் பிரதிகள் தேவை என்ற வார்த்தையை அலுவலக குமாஸ்தாவால் நம்ப முடியவில்லை. ஏனெனில், எடிசன் வழக்கமாக மூன்னூறு பிரதிகளே வாங்கி விற்பனை செய்து வந்தார். அதுவும் பத்திரிக்கைக் கிரயத்தைச் செலுத்தாமல் அவை விற்பனையானதும் பணம் தருவதாக இளம் எடிசன் இயம்பவே, அக்குமாஸ்தா "முடியாது" எனக் கூறி விட்டார்.

ஸ்டேஷன்களுக்குத் தந்தி மூலம் தலைப்பை விளம்பரப் படுத்தி யிருப்பதாக எடிசன் எடுத்துரைத்தார். இதன் பேரில், பத்திரிக்கை விற்பனைப் பிரிவு மானேஜரிடம் அவர் அழைத்துச் செல்லப்பட்டார். இறுதியாக "ப்ரீ ப்ரஸ்" ஆசிரியர் முன்பாகக் கொண்டு போய் அவரை நிறுத்தினார்கள்.

இளைஞரின் உணர்ச்சியையும் உற்சாகத்தையும் மெச்சி, பின் கண்ட குறிப்பை அவர் எழுதி அனுப்பினார்: "இந்தப் பையனிடம் அவன் கேட்கும் எல்லாப் பத்திரிகைகளையும் கொடுங்கள்."

ஆயிரம் பத்திரிகைப் பிரதிகளையும் பெற்றுக் கொண்டு எடிசன் புறப்பட்டார். டெட்ராயிட்டுக்கு பன்னிரண்டு மைல்களுக்கு அப்பால் ரயில் வண்டி நின்றது. பத்திரிகை வாங்கிச் செல்வதற்காகப் பெரும் திரள் அங்கு கூடி யிருந்தது. எவ்வளவு துரிதமாகப் பத்திரிகைகளைக் கொடுத்து பணம் வாங்க முடியுமோ அவ்வளவு துரிதமாக அவர் பத்திரிகை விற்றார். மொத்தம் நாற்பது பிரதிகள் விற்பனையாயின. இந்த இடத்தில் இதற்கு முன்பெல்லாம் இரு பிரதிகள் மட்டுமே செலவாயின. அடுத்த ஸ்டேஷனிலே பத்திரிகையின் விலையை ஐந்து சதத்தி லிருந்து பத்து சதமாக அவர் அதிகரித்தார். நூற்றைம்பது பிரதிகள் அங்கு விற்பனையாயின. அதற்குப் பிறகு பத்திரிகை விலையை இருபத்தைந்து சதமாக உயர்த்தினார். போர்ட் ஹூரான் போய்ச் சேரு முன்பு ஆயிரம் பிரதிகளும் விற்பனையாகிவிட்டன.

லாபந்தர தக்க இந்த லேவாதேவியில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு எடிசன் பழைய அச்சுக்கூடத்தைக் கிரயம் வாங்கினார். சாமான்கள் ஏற்றிச் செல்லும் வண்டியில் அந்த இயந்திரத்தைப் பொருத்தி "வீக்லி ஹெரால்ட்" என்னும் பத்திரிகையை அவர் வெளியிடலானார். இதனை "ஓடும் ரயிலில் பிரசுரிக்கப்பட்ட முதல் பத்திரிகை" என "டைம்ஸ்" வர்ணித்தது. (தொடரும்)

# செயற்கைச் 'சந்திரனும்' இயற்கைச் சந்திரனும்

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

'அல்லமல் இன்ஸான மாலம் யஃலம்' என்பது திருக்குர்ஆன் வசனம். "இறைவன், மனிதனுக்கு அவன் (இதற்கு முன்) அறியாதிருந்தவைகளையும் கற்பித்துக் கொடுக்கிறுன்" என்பது அதன் கருத்துரை.

"சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் இறைவனின் கட்டளைப்படி கட்டுப்பட்டு (இயங்கிக் கொண்டு) இருக்கின்றன"—இதுவும் குர்ஆன் ஆயத்தின் கருத்துரை.

மனிதனுல் என்ன செய்ய முடியும், என்ன செய்ய முடியாது என்பது மனிதனுக்கே தெரியாது. வான வெளியில் எவ்வளவு தூரம் பறக்க முடியும் என்பதை, ஆகாய விமானம் மூலமாய் செய்து சாதித்துக் காட்டி விட்டான் மனிதன்.

ஸைன்ஸ் என்னும் விஞ்ஞான ஆராய்ச்சியில், மனிதன் வெகு தூரம் முன்னேறிச் சென்று விட்டான். பூமிலோகத்தின் சகல பொருட்களையும் அவன் ஆராய்ச்சி செய்து, ஏதோ செய்து, ஏராளமாக சாதித்து விட்டான் இனி பூமியில் சாதனை ஒன்றுமில்லை என்று, வான லோகத்தின் பக்கம் அவன் சிந்தனை வெகு வேகமாக சென்று கொண்டிருக்கிறது. அதாவது, மனிதன் மனிதனேடு போட்டியிட்டு சாதித்துக் காட்ட முடியுமான சகல காரியங்களையும் செய்து முடித்து விட்டதாக நினைத்து, இப்போது வானத்தின் பக்கம் போகத் தொடங்கி விட்டான்.

இறைவனுல் சிருஷ்டிக்கப்பட் டியங்கி குளிர்ந்த ஒளி தந்து மக்களுக்கு, ஆதி நாள் தொடுத்து இற்றை நாள் வரை மகிழ்வித்து வரும், இயற்கை சந்திரனுக்குப் போட்டியாய், ஒரு 'சிறு' செயற்கை சந்திரனை சிருஷ்டித்து அதை, தன் விஞ்ஞான விசையின் வேகத்தால் வானுலகத்துக்கு அனுப்பி, அது அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறதென்று, ஆராய்ந்து கொண்டிருக்கிறுன் மனிதன்!

நான் எந்தச் செய்தி பற்றிக் கூறுகிறேன் என்பதை பத்திரிகை படிக்கும் நேயர்கள் யூகித்துக் கொண்டிருப்பார்கள். ஆம்! ரஷ்ய விஞ்ஞானிகளின் அபார சாதனையைப் பற்றித்தான் கூறுகிறேன்.

## ரஷ்யாவின் சாதனை.

ரஷ்ய விஞ்ஞானிகள், சில தினங்களுக்கு முன், சுமார் 185 பவுண்டு எடையுள்ள ஒரு சந்திரகோளத்தை (24 அங்குல அகல உருண்டை வடிவமான இயந்திரத்தை) உற்பத்தி செய்து, அதை மகா சக்தியுள்ள 'ராக்கெட்' என்னும் சுர்பாணத்தில் பொருத்தி, 500-அடி உயர மாடியில் கொண்டு போய் வைத்து, அங்கிருந்து அதை வானத்தில் சுட்டு, அங்கு போய் இயங்கும்படி செய்து விட்டார்கள்.

அந்தச் செயற்கை சந்திரன் சுமார் 600 மைல் உயரத்தில் போய், வான வீதியில், வாயு மண்டலங்களுக் கெல்லாம் அப்பால், சந்திரன், செவ்வாய், புதன் முதலிய கிரகங்களெல்லாம் பூமியை சுற்றி இயங்குவதைப் போல் சுற்றிச்சுற்றி வந்து இயங்கிக் கொண்டிருக்கிறதாம்.

உருண்டைவடிவமான அந்த செயற்கைச் சந்திரனுள், மின் சார விசையும், போட்டோக் கருவியும், ரேடியோ அறிவிப்பு சாதனமும், இன்னும் என்னென்னமோ சமிக்ஞைச் செய்திக் கருவிகளும் பொருத்தப்பட்டிருக்கின்றனவாம். இதனுல் அது, அங்கு வான மண்டலத்தில் 600 மைல் உயரத்துக்கப்பால் என்னென்ன காட்சிகள் காணப்படுகின்றனவோ அவற்றையெல்லாம், போட்டோ படம் பிடித்துவைத்துக் கொள்வதோடு, ரஷ்ய விஞ்ஞானிகளுக்கு மட்டும் விளங்கும் சமிக்ஞை பாஷையில், ரேடியோ ஒலி அலை மூலம், செய்திகளை அனுப்பிக் கொண்டே இருக்கிறதாம்.

மணிக்கு 18000 மைல் வேகத்தில் அது பூமி கோளத்தை சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருக்கிறதாம். இந்த அற்புத காட்சியை, அமெரிக்கா, பிரிட்டிஷ், ஜப்பான், இந்தியா முதலிய தேச விஞ்ஞானிகள் தங்களிடமுள்ள அபூர்வ ரேடியோ, மின்சார தூரதிருஷ்டிக் கருவிகளின் உதவியால் கண்டு களித்து, மேன்மேலும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிருர்களாம்.

இந்த செயற்கைச் சந்திரன் எங்கேபோகிறது, என்ன செய்கிறது, என்ன சொல்லுகிறது, அதன் அமைப்புச் சக்தி குறைகிறதா, குறையாம லிருக்க வசதி யிருக்கிறதா, அதன் சக்தி முடிந்து அது கம் பூமியில் வந்து விழுந்து விடுமா, அல்லது ஆகாயத்திலேயே அந்தர மாய் (திரிசங்கு சுவர்க்கம் போல்) தொங்கிக் கொண்டு இருந்து விடுமா—என்றெல்லாம், பற்பல தேச விஞ்ஞானிகள் அதைப்பற்றி விளக்கிக் கொண்டும் விமர்சனம் செய்துகொண்டும் இருக்கிருர்கள்.

ஆனுல், செயற்கைச் சந்திரனை வானவெளியில் சுழலவிட்டிருக்கும் ரஷ்ய விஞ்ஞானிகளோ, கொஞ்சமும் வியப்படையாமல் இருந்து, இன்னும் மேற்கொண்டு என்ன அபிவிருத்தி செய்யலாம் என்ற

ஆராய்ச்சியில் ஈடுப்பட்டுள்ளார்கள். "நாங்கள் அனுப்பிய 'குட்டிச் சந்திரன்' எங்கள் சொற்படியே இயங்கிக் கொண்டிருக்கிறது; நாங்கள் இங்கிருந்து அனுப்பும் சமிக்ஞை கேள்விக்கு, அது அங்கியங்கிய வண்ணம் பதில் சமிக்ஞை தெரிவித்துக் கொண்டிருக்கிறது. அதினுள் இருக்கும் சக்தி, தீர்ந்துபோய் அது தொப்பென்று வந்து விழுந்து நொறுங்கிப் போகாது—என்றெல்லாம், மகா ஆச்சரியம் தரும் செய்திகளைக் கூறுகிறார்கள்.

அமெரிக்க விஞ்ஞானிகளோ, "ஆஹா! எங்களிடமும்தான் அந்த மாதிரி, செயற்கை சந்திரன் போன்றதை சிருஷ்டித்து வான வெளியில் விட்டு உலாவச் செய்வதற்கு சாதனம் இருக்கிறது. நாங்களும் அப்படி செய்யத்தான் இருந்தோம்; அதற்குள் ரஷ்யர்கள் முந்திக் கொண்டாகள்; இன்னும் சில தினத்தில் அதைவிட அபூர்வமானதை நாங்கள் சாதிக்கப் போகிறோம்" என்று சபதம் கூறுகின்றனர்.

## எதிர்பாராத விஷயம்.

மனிதன் எதிர்பார்த்த வண்ணமே எல்லாம் நடந்து விட்டால் 'எல்லா வல்ல இறைவனார் ஒருவர்' எதற்கு இருக்கிறார்? மனிதன் புரியும் இந்த வேடிக்கைகளை யெல்லாம் அந்த எல்லாம் வல்ல இறைவனார், (தனது குழந்தைகளின் பொம்மை விளையாட்டை தகப்பனார் கவனித்து மகிழ்வதைப்போல்) கண்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை, மனிதன், எந்த ரேடியோ—டெலிவிஷன் கருவியை வைத்து, கண்டுபிடிக்க முடியும்.

ரஷ்ய விஞ்ஞானிகள் ஒரு விஷயத்தில் ஏமாற்றமடைந்தனர். அதாவது 24 அங்குல அகல சுற்றுவட்ட வடிவமான செயற்கைச் சந்திர உருண்டையை, ஒரு கவசத்தினால் உறுதியாய் போர்த்து, அதை ராக்கெட் (சுர்பாண) இயந்திர னுள் பொருத்தி, வானத்தில் சுட்டு 500—மைல்களுக் கப்பால் எறிந்து விட்டார்களல்லவா? அது போகும் வேகத்தில் அந்த ராக்கெட் அந்த உருண்டையை வான மண்டலத்துக்கு அப்பால் எறிந்து விட்டது. அங்கு வாயுவின் அழுத்தம் இல்லாததாலோ, பூமியின் பூகர்ஷசக்தி இல்லாததாலோ, மேலே ஆகர்ஷண சக்தி இல்லாததாலோ, ரஷ்ய விஞ்ஞானிகள் எதிர்பார்த்த வண்ணம், ஏற்றிச் சென்ற ராக்கெட் விமானம் திரும்பி வரவில்லை. வான வெளியில் பல கோளங்களின் சுபாவப்படி, இந்த ராக்கெட் வாகனமும், செயற்கை சந்திரனைப் பின்பற்றி, தனியே பூமியை சுற்றிச் சுற்றி வருகிறதாம்;

## ஆண்டவனே!

இனி என்ன நிகழும் என்பதை யார் அறிய முடியும்! எங்கள் இஸ்லாமியக் கொள்கைப்படி, "இன்னல்லாஹ அலா குல்லி ஷய்யின்

கதீர்'' (நிச்சயமாய் அல்லாஹு தஆலா மட்டுமே சகல விஷயங்களின் மீதும் மகா ஆற்றல் சக்தி உடையவனாக இருக்கின்றான்) என்ற திருமறைச் சொற்படி, இனி என்ன நிகழும் என்பதை ஆண்டவனே நன்கு அறிவான். ரஷ்யரின் செயற்கைச் சந்திரனின் முடிவு யாதாகு மென்பதையும் ஆண்டவனே நன்கு அறிவான்.

புதிய, நவீன விஞ்ஞானத்தினால் மனித சமூகத்துக்கு எவ்வ ளவோ நன்மைகள் உண்டா யிருக்கின்றன. மின்சாரம், தந்தி, டெலி போன், ரேடியோ, டெலிவிஷன், எக்ஸ்ரே, ரயில், கப்பல், ஆகாய விமானம், இயந்திரங்கள் முதலியவைகளால், இன்றைய நவீன நாகரிக உலகமக்கள் அடைந்து கொண்டிருக்கும் பிரயோஜனங்கள் அபார மானதாகும். இதையெல்லாம், அறிவு வாயிலாய் மனிதர்க்கு அளித் தருள் புரியும் எல்லாம் வல்ல இறைவனை நாம் போற்ற வேண்டும்.

விஞ்ஞான சாதனங்களை, நானில நன்மைக்குப் பயன்படுத்தும் போது, யுத்த காரியங்களுக்கும் அழிவுச் செயல்களுக்கும் கூட மனி தன் அதை உபயோகப்படுத்திக் கொள்கிறான். அணுக்குண்டும், ஹைட்ரஜன் குண்டும், ஆளில்லாமல் போய்ச்சுடும் ராக்கெட் குண்டும் எதற்கு? ஆண்டவனை மறந்து, மனுஷ்ய தர்மத்தை இழந்து செய்யும் கோர காரியங்களல்லவா இவை? இப்படிப்பட்ட நாசகாரியங்களை விட்டும், பலாய் முஸீபத்துகளை விட்டும் ஆண்டவன், நம்மெல்லா மனிதவர்க்கத்தையும் காப்பாற்றுவானாக. ஆமீன், யாரப்பல் ஆலமீன்!

---


## ஔரங்கஸீப்

இது டில்லி மன்னர் ஷாஜஹான் சக்ரவர்த்தியின் புத்திர சிகாமணியாகிய ஔரங்கஸீப்பின் சரித்திர வரலாறு. இவர் நமது இந்திய அரசரான படியால் இவருடைய சரிதையை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது அவசியம்.

விலை ரூ. 1–56

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

(32-வது பகுதி)

# திருக் குர்ஆன் சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## உலகத்தில் நிகழ்வுற்ற முதலாவது கொலை!

மேலும் ஏ (முஹம்மத்) நபியே, (ஆதிபிதா) ஆதம் நபியின் இரு குமாரர்களைப்பற்றிய உண்மை வரலாற்றை, நீவிர் உமது (முஸ்லிம்) ஜனங்களுக்கு எடுத்துரைப்பீராக. (அதாவது:) அந்த இருவரும் (இறைவனுக்கு அர்ப்பணம் செய்ய) பலி (பொருள்) கொண்டு வந்து வைத்தார்கள். ஒருவனுடைய பலி(ப்பொருள் இறைவனால்) ஏற்றுக் கொள்ளப்பட்டது; மற்றவனுடையது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. (எவனுடைய பலிப் பொருள் ஏற்றுக்கொள்ளப்படவில்லையோ) அவன், தன்னுடைய சகோதரன் மீது ஆத்திரங்கொண்டான். மேலும் (அவன் இவனை நோக்கி) "ஆண்டவன், தனக்கு எவன் பயப்படுகிறானோ அவனுடைய பலியைத்தான் ஏற்றுக் கொள்கிறான்; (ஏன் நீ வீணே என் மீது கோபங் கொள்கிறாய்?) அங்ஙனம் நீ என்னை கொல்வதற்கு என் பக்கம் கையை உயர்த்துவாயானாலும் நான் உன்னைக் கொல்வதற்கு என் கையை (ஒரு போதும்) உயர்த்த மாட்டேன; ஏனெனின் சர்வலோக ரக்ஷகனாகிய அல்லாஹ்வுக்கு நான் பயப்படுகிறவனாக இருக்கிறேன். மேலும், நீ (அப்படிச் செய்வாயானால்), உன்னுடைய பாபங்களையும் என்னுடைய பாபங்களையும் நீ சுமந்து கொண்டு போவாயாக. எனவே நீ நரகவாதிகளில் போய்ச் சேர்வாயாக. அநியாயக்காரர்களுக்கு இதுதான் தண்டனை" என்று சொன்னான்.

இதனால் (ஆத்திரங் கொண்ட) அவனுடைய மனது, அவனைத் தன் சகோதரனையே கொன்றுபோடுவதற்குத் தூண்டிவிட்டது. எனவே அவன் இவனை கொன்றுபோட்டு விட்டான். (இவ்வாறாக) அவன் (கொலைச் செயலால் உலகில்), நஷ்டவாளிகளில் சேர்ந்தவனாகி விட்டான். (நபி ஆதமுடைய மைந்தர்களான மாந்தர்களின் வாழ்வில் உலகத்தில் முதன் முதலாக நிகழ்ந்த கொலைச் செயல்—அதுவும் சகோதரனை சகோதரன் கொல்லத்துணிந்தது இதுவேயாகும். ஹாபீல் என்பான் காபீலைக் கொன்று விட்டு, மையித்தை என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தான்.)

அப்போது அல்லாஹ் (தஆலா) காகங்களை அனுப்பிவைத்தான். ஒரு காகம், (மூக்கினால்) பூமியில் தோண்டி குழிபறித்துக் கொண்

டிருந்தது. அப்போது அவனுக்கு, தன்னுடைய சகோதரனின் பிரேதத்தை (மண்ணுள்) எப்படி மறைப்பது என்பது புரிந்து விட்டது. (காகத்தின் அதிசயச் செயலைக் கண்ட) அவன், 'நான் என்னுடைய சகோதரனுடைய பிரேதத்தை மறைக்கும் விஷயத்தில் இந்த காகத்துக்குக்கூட சமமாக இல்லையே' என்று கூறி வெட்கப்பட்டான். (ஜுஸு: லாயுஹிப்புல்லாஹ்; ஸூரா: மாயிதா; ருகூ: 5)

## 950-வருஷ ஆயுள் பெற்றிருந்த நூஹு நபி

(ஹஜ்ரத்) நூஹை, (இறைவனாகிய) யாம், அவருடைய கூட்டத்தாரிடையே (நபியாக்கி) அனுப்பி வைத்தோம். அவர்களிடையே (சேவை செய்து கொண்டு) அவர், ஒன்பதுநூற்றி ஐம்பது வருஷங்கள் வாழ்ந்தார். ஆயினும் (நூஹ் நபியுடைய சமூகத்து) ஜனங்கள், (ஆண்டவனுக்கு வழிபடாது) அக்கிரமக்காரர்களா யிருந்தனர்; எனவே, மகாப்பிரளயம் தோன்றி அவர்களைச் சூழ்ந்து கொண்டது. அப்போது (இறைவனாகிய) நாம், (நூஹ் நபி யாகிய) அவரையும் அவருக்கு வழிபட்டிருந்த படகுக்காரர்கள் அனைவரையும் (பிரளயத்தி லிருந்து) காப்பாற்றிக் கொண்டோம். மேலும் நாம் அந்தப் படகை (அவர்கள் தப்பி மற்றவர்கள் மூழ்கி மடிந்த வரலாற்றை) உலக ஜனங்களுக்கு, ஒரு படிப்பினை யாக்கிவைத்தோம். (ஜுஸு: அம்மன் கலக; ஸூரா: அன்கபூத்; ருகூ: 2)

## 'பைத்துல் முகத்தஸ்' பள்ளி நிர்மாணத்தின் போது ஸுலைமான் நபியின் நூதனமான மரணம்.

(ஹஜ்ரத்) ஸுலைமான் (நபி) தாம் (கட்டி) நிர்மாணிக்க வேண்டிய (மகாப் பெரும் அற்புதக்) கட்டிடங்களை, அவர்களது ஆக்ஞைப்படி 'ஜின்'கள் செய்து கொடுத்துக் கொண் டிருந்தன: (அவை) உயரமான, மகத்தான கட்டிடங்கள்; (மனித உயரத்தில் பலவித) உருவச் சிலைகள், (பெரும் பெரும்) அணைக் கட்டுகளான தடாகங்கள், (ஓரிடத்திலிருந்து வேறு இடத்துக்கு எடுத்துச் செல்ல இயலாத) பெரும் பெரும் (செப்புப் பாத்திரங்கள் முதலியவைகளாம்.) ஏ தாவூதுடைய சந்ததிகளே, (மற்றும் ஜனங்களே,) நீங்கள், (இறைவனின் இந்த அருட் பாக்கியங்களுக்காக) எங்களுக்கு நன்றி (வணக்கம்) செலுத்துவீர்களாக. (ஏனெனின் எம் மனித) அடியார்களில் ஒரு சில பேர்கள் தான் நன்றி (வணக்கம்) செலுத்துபவர்களாக இருக்கின்றனர்.

பிறகு யாம் (யாரும் எதிர்பாரா வண்ணம்) சுலைமான் (நபி)க்கு மரணம் வந்தெய்த உத்தர விட்டோம். அவர் மரணிக்கும் விஷயம் பற்றி, ஜின் வர்க்கத்தினர் யாருக்குமே (முற்கூட்டி) செய்தி அறிவிக்க வில்லை. ஆனால், அரித்துத் தின்ற 'செள்' பூச்சிகள் (அவர்களுக்கு

நபி சுலைமானின் மரணத் தகவலை எப்படி அறிவித்தன வென்ருல்) சுலைமான் நபியின் (கரம் சாய்ந்து ஊன்றிக் கொண்டிருந்த) அஸா (என்னும் கைத்) தடியை (உள்ளுக்குள் தின்று) அரித்துக் கொண்டே இருந்தன. (அதாவது நின்ற வண்ணமே சுலைமான் நபியின் உடலிலிருந்து உயிர்ப் பிரிந்து விட்ட தெனினும், அஸாத் தடியின் ஆதரவு பெற்று, சரீரம் விழுந்து விடாமல் நின்றிருந்தது. தடியை செள் அரித்த பின்னரே) சுயமே அவர் (பிரேதம்) தரையில் விழுந்ததும் (மரண விஷயம்) ஜின்களுக்குத் தெரிய வந்தது. (அதுவரை, சுலைமான் நபிக்கு வருங்கால விஷய ஞானமும் உண்டென்று நம்பிக் கொண்டிருந்த) ஜின்கள், "ஓ, அவர், வருங்காலத்தை (கைபான மரணச் செய்தியை முன் கூட்டி) அறிபவராக யிருந்திருந்தால், நாம் (நம் எஜமானருடைய மரணமும் அறியாது போன) இந்த அபகீர்த்தியான வேதனையில் சிக்கி யிருக்க மாட்டோம்" என்று கூறிப் பிரலாபித்தனர்.

(ஜுஸு : வமன் யக்னுத்; ஸூரா : ஸபா; ருகூ : 2)

* * * *

(விளக்கம் :—காற்றையும் ஜின் (பூதங்)களையும் வசியம் பெற்றிருந்த ஹஜ்றத் ஸுலைமான் நபி (அலை) அவர்கள், ஜின் வர்க்கங்களின் அபாரமான ஊழிய வேலைத்திறனைக் கொண்டு, உலகில் கட்டிட நிர்மாணம் சம்பந்தமான அரிய காரியங்களை சாதித்து வந்தார்கள். இறுதியாய் 'பைத்துல் முகத்தஸ்' என்னும் உலகிற் சிறந்த புனித பள்ளிவாசலைக் கட்டும் வேலையில் ஈடுபட்டு, தானே நேரில் வந்து ஜின்களை வேலை வாங்கிக் கொண்டிருந்தார்கள். கணக்கற்ற கொத்தர்களும் சிற்பிகளும் ஜின் ஊழியர்களும் எஜமானுக்கு இணங்கி வேலை செய்து கொண்டிருந்தனர். சுலைமான் நபி, தமது அஸா என்னும் கைத்தடியின் பால் ஒருக்கணித்து சாய்ந்தவர்களாய் நின்று வேலைகளை மேற்பார்வை யிட்டுக் கொண்டிருந்தனர். அதே நிலையில் 'மவுத்து' வந்து, அவர்கள் மரணித்து விட்டார்கள். ஊன்று கோல் பலத்தால் சரீரம் சில நாள் நின்று கொண்டிருந்தது; அஸாத் தடியை செள் அரித்து கோல் முறிந்த பின்னரே சரீரம் தரையில் வீழ்ந்தது. அப்போதே, ஜின்களுக்கும் தொழில் நிபுணர்களுக்கும் நம் எஜமானர் இறந்துபோய் சில நாள் ஆயிற்று என்று தெரிந்து, திடுக்கிட்டனர். அதாவது, பைத்துல் முகத்தஸ் பள்ளி கட்டிட வேலை பூர்த்தியாகு முன்னரே சுலைமான் நபி இறந்து விட்டார்க ளெனினும், கட்டிட வேலை பூர்த்தியாகும் வரை இச்செய்தியை இறைவன், அற்புதமான வகையில் தெரிவிக்கா திருந்து வேலை பூர்த்தியான பின், ரகசியத்தை அம்பலப்படுத்தினுன். இதுவும் ஆண்டவனுடைய 'குத்ரத்' என்னும் சக்தியாகும்.)

## நபிமார்களின் மனைவியரில் வழிகெட்டுப் போன சிலர்.

அல்லாஹ் (தஆலா) காபிரானவர்களுக்கு படிப்பினை புகட்டுவதற்காக, நூஹ் (நபி) உடைய (தீய) மனைவி யுடையவும், லூத் (நபி) உடைய (தீய) மனைவியுடையவும் உதாரணத்தை (இவ்வாறு) எடுத்தோதுகிறான். (அதாவது:) அந்த இரண்டு பேரும், எம்முடைய நல்லடியார்களில் இரண்டு உத்தமர்களுடைய விவாகத்திற்குள் வந்திருந்தனர். ஆயினும் அப்பெண்கள், (தம் கணவரான) நூஹுக்கும், லூத்துக்கும் துரோகம் செய்து (வழி கெட்டுப் போய்) விட்டனர். (இதன் காரணமாய், அந்த இரண்டு துஷ்ட ஸ்திரீகள் மீதும், பிறகுப் படிப்பினையாக, கடுமையான வேதனை—தண்டனையாக இறங்கி அழிந்தனர்.) மேலும் எமது அந்த நல்லடியார்கள் (நபிகளாக இருந்துங்கூட) (தீயவர்களான) அவர்களைக் காப்பாற்றும் விஷயத்தில் ஆண்டவனுக்கு எதிரிடையாய் ஒரு உதவியும் செய்ய முடியாது (இயலாது) போயினர். (பாபம் செய்த) அந்தப் பெண்கள் (உலகிலேயே தக்க தண்டனை அடைந்த தல்லாமல், கியாமத்திலும்) 'நரகத்திற்குப் போகும் இதர பாபிகளோடு நீங்களும் போய் நரகில் விழுங்கள்' என்று அவர்கள் சபிக்கப்பட்டனர். (தொடரும்)

புதிய இரண்டாம் பதிப்பு

**நபிநாயகத்தின் ஜீவிய சரித்ரம்**

(சீருவசனம்)

இச்சரிதை நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவதரித்தது முதல், வபாத்து, வரையில் நிகழ்ந்துள்ள விஷயங்கள் யாவும் ஒன்று சேர்த்து அச்சிடப்பட்டது. இது டிம்மி 1-8 பேஜ் ஸைஸில் 1008-பக்கங்களில் பதிப்பித்து இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூ. 8

ஷை அறபுத் தமிழ் அஷ்ஷஜாதுல் முஹம்மதியா (ரஸூலுல்லாஹ்வின் சரிதை.) இதன் விலை ரூ. 8

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# சிறைப் பறவை சிப்கத்துல்லா

## அல்லது

# துப்பு துலக்கிய தூயவர்.

### 13-வது அத்தியாயம்.

சிப்கத்துல்லாவின் ஆடை உடுப்புகளைப் பிரித்து விரித்து வைத்த பொழுது பணியாள் பஹதூர்ஷா திடுக்கிட்டான்; சிப்கத்துல்லாவுக்கும் தெரிந்திராத விஷய மொன்றை அவன் கண்டு கொண்டான். வீட்டுக்கு வந்தவுடன் படுக்கை யறைக்கு விரைந்து சிகரெட்பற்ற வைத்துப் பிடித்துக் கொண்டிருந்த சிப்கத்துல்லா விடம் ஓடோடிச் சென்று அவன் சொன்னான்:

"உங்களது வெள்ளை கோட்டின், இடுப்புப் பித்தான் மாயமாய் மறைந்து விட்டிருக்கிறது, எஜமான் நான் மிகவும் வருத்தப்படுகிறேன்; ஏனெனில், உங்களிடமுள்ள வெள்ளை கோட்டு இது ஒன்றுதான்."

"பஹதூர், பதறாதே!" சிப்கத்துல்லா சிரித்துக் கொண்டே சொன்னார். வாழ்வில் கவலையை யொழித்து கழிபேருவகை கொள்வாயாக. பின்புறம் நாடாவை இழுத்துக்கட்டி விடலாம்; அல்லது ஓட்டையைத் தைத்து விடலாம். கைத் தையல் வேலையில் நீ நிபுணனல்லவா?"

"எனது கைத் தையல் மிகவும் போற்றப்படுகிறது, எஜமான்" பெருமையுடன் பஹதூர் பறைசாற்றிக் கொண்டான். "உங்கள் யோசனை சாலச் சிறந்தது என்று எண்ணுகிறேன். ஏனெனில் தைக்காவிடில், இந்த கோட்டு உபயோகமற்றதாகி விடும். குறிப்பாக உங்களைப் போன்ற கனவான்களுக்கு அது உதவாக்கரையாகிவிடும்"

சாவகாசமாக உடைமாற்றிக்கொண்டே சிப்கத்துல்லா வினவினார்: "பஹதூர், எப்போதாவது எவரையாவது நீ கொலை புரிந்ததுண்டா?"

"இல்லை, எஜமான். நான் ஒரு போதும் ஒருவனையும் கொலை புரியவில்லை. கொலை புரியத் துணிவு கொள்ளவு மில்லை. நான் வாலிபனாக இருக்கும் பொழுது ஒரு பூனை மீது சைகிலை ஏற்றி விட்டேன், வாலிபவயதில் சைக்கில் சாம்பியனாக நான் இருந்திருக்கிறேன்"

"ஆனால், நீ ஒருவனையும் கொல்லவில்லையா? ஒருவனையும் கொல்லவும் நீ விரும்பியதில்லையா?"

"இல்லை. அம்மாதிரி விருப்பம் எனக்கிருந்தது என்று என்னால் சொல்லமுடியாது"

187968

"பஹதூர், நீ மேன்மையுள்ளம் படைத்தவன். இடுப்பு ஜேபி ஏதாவது இருக்கிறதா?" கால் சட்டையை தட்டிக்கொண்டே சிப்கத்துல்லா வினவினர்.

"கால் சட்டையில் அந்த ஜேபி இருப்பது குறித்து நான் வருந்துகிறேன், மிகவும் வருந்துகிறேன். இடுப்பு ஜேபியில் சிகரெட் டப்பாவை வைத்துக் கொள்ளும் பழக்கத்துக்குப் பலர் பலியாகி யிருக்கிறார்கள்; இதனல் முழங்காலுக்கு அருகில் முண்டம் ஏற்பட்டு விடுகிறது....",

"எனது கோட்டின் நிலையைபற்றி எள்ளளவும் கவலை கொள்ளாதே. அங்கு நான் சிகரெட் டப்பா வைத்துக்கொண்டிருக்கவில்லை"

"கனத்த வஸ்துவை திணித்துக்கொண்டால் பார்ப்பதற்கு அருவருப்பாக இருக்கும்"

விவாதத்தை நீட்டிக்கொண்டு செல்ல விரும்பாமல், "டாக்ஸி அழைத்துவா" என்று சிப்கத்துல்லா கட்டளை யிட்டார்.

டாக்ஸியுடன் பஹதூர் திரும்பி வந்த பொழுது, சிப்கத்துல்லா உடை உடுத்திக்கொண்டு தயாராகி நின்றிருந்தார்.

"கிளப் இன்ஸானியத்"துக்கு வெகு தூரத்திலிருக்கும் பொழுதே காரைவிட்டிறங்கி மெதுவாகச் சிப்கத்துல்லா நடைபோட்டார். எங்கும் இருள் சூழ்ந்திருந்தது; மணி ஒன்பதரை ஆகியிருந்தது.

"கிளப் இன்ஸானியத்"தின் அங்கத்தினர்கள் அனைவரிடையேயும் பரஸ்பரம் பழக்கமொன்று இருந்தது; எவரும் நேராகக் காரில் கிளப்பு வாசலில் சென்று இறங்குவதில்லை. கிளப் சிறிது தூரத்திலிருக்கும் பொழுதே கிழே இறங்கி காரை அனுப்பி விட்டு நடந்துதான் செல்வார்கள். ஆகவே, அந்த கிளப்பைப்பற்றி டாக்ஸி டிரைவர்கள் எவரும் அறியமாட்டார்கள். இந்த விதியை ஒவ்வொருவரும் கடுமையாக அனுஷ்டித்து வந்தனர்; விதியை மீறுவோரின் ராஜிநாமா கோரப்படா விட்டாலும் அது கொலையில் முடிவடையும்.

கிளப் கட்டிடத்தைப் போய்ச் சேரு முன்பு, ரஸ்தாவை யொருவன் கடந்து செல்வதை சிப்கத்துல்லா கவனித்துக் கொண்டார். அந்த மனிதன் காதர்கான் என்பதை எளிதில் அவர் அடையாளம் கண்டு கொண்டார். அந்தச் சமயத்தில் அவனை அவர் சந்திப்பது விரும்பத்தக்க தல்ல வாதலால் திரும்பி வந்த வழியே நடந்தார். இருவரும் ஏக காலத்தில் "லிப்ட்"டில் செல்வதைத் தவிர்க்க வேண்டுமென்பதே அவரது நோக்கம்.

காதர்கான் அவசர அவசரமாக "லிப்ட்"டில் ஏறிக்கொண்டான். அது மிக மெதுவாக நகர்ந்து கொண்டிருப்பதாக அவனுக்குத் தோன்றியது. மூன்ருவது மாடிக்குச் சென்றதும் அதிகாரத்தோடு அவன் வினவொன்று விடுத்தான்.

"இல்லை, எஜமான், எவரும் வந்திருக்கவில்லை. எவராவது வந்தால், உங்களிடம் நேராக அனுப்பி வைக்கிறேன். நீங்கள் எங்கு தங்கி யிருக்கப் போகிறீர்கள்? உங்களுக்காக எந்த அறையும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்க வில்லையே—உங்களது அறை கூட ஒருவரால் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறது. அந்த அறையை எவருக்கும் விடும் வழக்கம் இல்லை. இன்றிரவு எல்லா அறைகளிலும் ஆட்கள் இருக்கிறார்கள்; பெரிய எஜமான் கூட ஆக்ஷேபனை எதுவும் செய்ய வில்லை."

"இல்லை, நானும் ஆக்ஷேபிக்கவில்லை. நீயும் அதைப்பற்றிக் கவலைப்படாதே. தங்கியிருப்போரின் பதிவுப் புத்தகத்தைக் கொண்டு வா"

சிவப்பு அட்டைபோட்ட அந்த புத்தகம் கொண்டுவரப்பட்டதும் அதைத் திறந்து அவன் புரட்டிப் பார்த்தான்.

"நல்லது, இங்கு யார் இருக்கிறார்கள் என்று என்னிடம் மீண்டும் சொல்"

"மூன்றாவது அறையில் சிங்கார புருடர் சிராஜுத்தீன் கான் அவரது நண்பர்களோடு தங்கி யிருக்கிறார். நாலாவது அறையில் நாகரீக மனிதர் நஸீருத்தீனும் அவருடன் திரிந்து கொண்டிருக்கும் இரு ஆரணங்குகளும் இருந்து கொண்டிருக்கிறார்கள்." இவ்வாறு ஒவ்வொரு அறையாக வர்ணித்துக் கொண்டே வந்து "எட்டாம் எண்ணுள்ள அறையில்...." என்றான்.

"எட்டாம் எண்ணுள்ள அறையைப்பற்றி எனக்கு எல்லாம் தெரியும்" காதர்கான் இடைமறித்தான், "என்னைப்பற்றி நீ கவலை கொள்ளாதே"

ஜமக்காளம் விரித்த நடை முற்றத்தின் வழியே நடந்து, வலது பக்க வழியில் திரும்பி "எட்டு" என்ற எழுத்து பொறிக்கப்பட்டிருந்த அறைக் கதவுக்கு முன்பு சிறிது நின்றான். பின்னர், கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான். சிவப்பு துணி விரிக்கப் பெற்றிருந்த மேஜையில் தேனீர்க் கோப்பைகளும் கிண்ணங்களும் வைக்கப் பட்டிருந்தன.

அது சற்றுப் பெரிய அறை. ஒரு சோபாவும் நான்கு நாற்காலி களும் ஒரு சாய்வு நாற்காலியும் இருந்தன. அறையில் விளக்குகள் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தன. ஆறு வளைவு விளக்குகளுக்கு மத்தியில் மேஜைக்கு நேராக ஒரு விளக்கு சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. கதவை மூடாமல் அவன் அதைச் சற்று திறந்து வைத்திருந்தான். அதிக வெளிச்சத்தை அவன் விரும்ப வில்லை. எனவே, எல்லா வளைவு விளக்குகளையும் அணைத்து விட்டான். மத்தியில், மேஜைக்கு நேராக இருந்த விளக்கு மட்டும்

எரிந்து கொண்டிருந்தது. கதவுப் பக்கம் முதுகு வைத்தவனுய் அவன் அமர்ந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் ஓசையொன்று கேட்டது: "லிப்ட்" மேலே வரும் ஓசை தான் அது. அந்த ஓசைக் கேட்டதும் அவன் புன்னகை செய்து கொண்டான். சிநேக பாவத்துடன், சிரித்த வண்ணம் சிப்கத்துல்லா வந்து கொண்டிருந்தார்.

"அஸ்ஸாமு அலைக்கும், காப்டன் சாஹிப்." புன்னகையுடன் போர்டர் சிப்கத்துல்லாவைப் பார்த்து சொன்னுன். "நீங்கள் திரும்பி வந்திருப்பதைக் கண்டு களிபேருவகை யடைகிறேன். நேற்றிரவு நீங்கள் இங்கு வந்திருந்தபோது நான் இருக்கவில்லை. வடநாட்டில் நீங்கள் நன்கு பொழுது கழித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்."

"வடநாட்டைப் பற்றியா கேட்கிருய் ?" இகழ்ச்சியோடு சிப்கத்துல்லா வினவினர். போர்டர் குறுநகை புரிந்தான். "பழைய கும்பல் தான் என்று நான் நினைக்கிறேன்."

"ஆமாமுங்கே"

"போலீஸார் வந்தால் தப்பியோடுவதற்குப் பின்புற வழி இருக்கிற தல்லவா? அல்லது போலீஸார் எல்லாரையும் சரிகட்டி விட்டீர்களா?"

"இப்போது போலீஸாரால் தொல்லை விளைகிற தென நான் நினைக்கவில்லை. போலீஸ் அதிகாரிகளில் சிலர் அடிக்கடி இங்கு விருந்துண்ண வருகிறுர்கள்; சில சமயங்களில் இளப் மிக சௌகரிய மாக விருக்கிறது, எங்களில் எவரையும் அவர்கள் சிறையி லடைப்பார் கள் எனறு நான் நினைக்கவில்லை."

"நானும் அவ்வாறே தான் நினைக்க வேண்டும். போலீஸ் அதிகாரிகளில் எவர் இங்கு வந்து போய்க் கொண்டிருக்கிறுர்கள் ?"

"இன்ஸ்பெக்டர் இனயத்துல்லாகான் வந்து போய்க் கொண் டிருக்கிறுர். முன்பு ராஜாக்கான் சாஹிபும் ஒரு தடவை வந்தார். அவர் இங்கு தனிமையாகவே வந்தார், ஒரு அறையை எடுத்துக் கொண்டார். தனியாகவே வந்தார்! உங்களால் நம்ப முடியுமா? வந்தார், விருந்துண்டார். எவரையும் காணவில்லை, தனியாகவே சென்றுர். அவர் தற்போது இங்கு இருக்கிறுர் என்று நான் நினைக்க வில்லை" நெற்றியைத் தடவித் தட்டிக் கொண்டே அவன் சொன்னுன், "போலீஸ்காரரில் அவரைப் போன்று எவரையும் நான் காணவில்லை."

"அவர் துப்பறிபவரா என்பது எனக்குத் தெரியாது. நான் கேள்விப்பட்டவரை, போலீஸ் இலாக்காவுடன் அவருக்கு எவ்வித சம்பந்தமு மிருப்பதாகத் தெரியவில்லை."

"துப்பறிவதற்காகத் தனியார்களால் அமர்த்தப்பட்டவரா?" அதிருப்தியுடன், ஏமாற்றத்துடன் போர்டர் வினவினன்.

"அப்படியும் சொல்வதற்கில்லை. எவ்விதத்திலும் உங்களுடைய அல்லது நமது கௌரவ அங்கத்தினர்கள் எவருக்கும் தொல்லை கொடுப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. இங்கு யார் இருக்கிறார்கள்?"

இடது புறமும் வலது பக்கமும் திரும்பிப் பார்த்துக் கொண்டே மிக மெதுவாக அவன் சொன்னன்:

"உங்களுக்குத் தெரிந்த ஒருவர் இங்கு இருக்கிறார்."

அர்த்த புஷ்டியுடன் அவன் சொன்னதைக் கேட்டதும் சிப்கத்துல்லா சிரித்துக் கொண்டார்.

"எனக்குத் தெரிந்த எவராவது இங்கு இல்லையானல், இது விநோத கிளப் ஆகவே இருக்கும். என்னைப் பற்றிக் கவலைப் படாதே. எங்காவது மூலையில் நான் இருந்து கொள்வேன்..."

* * * *

கடிகாரத்தை காதர்கான் பார்த்துக் கொண்டான். மணி ஒன்பதே முக்கால் ஆகி யிருந்தது. விளக்கை உற்றுக் கவனித்தான். கண்ணாடி அலமாரில் தன்னைப் பார்த்துக் கொண்டு திருப்தி யடைந்தவனாகத் தோன்றினன்.

எட்டாம் எண்ணுள்ள அறை. மரியமோ அவனது மனைவி முகத்தில் குபீரென இரத்தம் பாய்ந்தது. அவள் பனயமாக இருப்பாள். வயோதிக தந்தைக்கு அவன் உதவி புரிந்து விட்டான். ஆனல் இந்த முறையைப் போல வேறு எப்போதும் தந்தையின் திட்டத்துக்கு அவன் முற்றிலும் உடன்பட்டு உடந்தையாக இருந்ததில்லை.

"அவளை பூமியில் வீழ்த்தி விடு." கரீம் ஷரீப் கட்டளையிட்டிருந்தான். அல்லாஹ்வின் மீது ஆணையாக அவன் அவ்வாறு செய்து தான் ஆக வேண்டும். சிப்கத்துல்லாவைப் பொறுத்த வரை...

கதவு இரகசியமாகத் திறந்து கொண்டது; துப்பாக்கி யேந்திய கரமொன்று உள்ளே வந்தது. கதவு 'கிறீச்'சிடும் சப்தத்தை அவன் கேட்டான்; ஆனல் திரும்பிப் பார்க்கவில்லை. அதற்குள்:

"டுமீல்!"

துப்பாக்கி சுட்டதும், காதர்கான் வேதனை அனுபவித்தான். அந்த வேதனை சகிக்க முடியாததாக விருந்தது; முகங் குப்புற அவன் கீழே விழுந்தான்.

இரு தடவை அவன் எழுந்திருக்க முயற்சித்தான். குமுறலுடன் அவன் தலை கீழ் சாய்ந்தான். (தொடரும்)

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

தமிழ் நாட்டு முஸ்லிம்களது நன்மைக்காக திருக்குர் ஆனின் தப்ஸீரை தமிழ் பாஷையில் மிகவும் விளக்கமாகவும், தெளிவாகவும், சங்கை பொருந்திய ஸுன்னத்து வல்ஜமாஅத்தின் உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, மிகப் பிரயாசையோடு யாவரும் ஆமோதித்து புகழத்தக்க விதமாய் விளக்கத்தோடு இத் தப்ஸீரை எழுதி அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம்.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழகாக எழுதி போட்டோ பிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்து அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங்களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

**முதல் பாகம் :** இந்த தப்ஸீர் ஸூறத்து பாத்திஹா—பகறாவி லிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) $5\frac{1}{4}$-ஜுஸு வரை — இதன் விலை ரூ. 10–00

**இரண்டாம் பாகம்:** சூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தௌபா முடிய (சுமார் 5-ஜுஸு) இரண்டாம் பாகமாக வெளி வந்திருக்கிறது. — இதன் விலை ரூ. 10–00

**மூன்றும் பாகம்:** சூரே யூனுஸ் முதல் ஸூறத்துந் நஹ்ல் முடிய 7-சூறுக்களின் தப்ஸீர் மூன்றும் பாகமாக வெளி வந்திருக்கிறது. — இதன் விலை ரூ. 10–00

**நான்காம் பாகம்:** ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூரத்து நூர் முடிய 8 ஸூராக்களின் தப்ஸீர் நான்காம் பாகமாக வெளி வந்திருக்கிறது. — இதன் விலை ரூ. 10–00

5-ம் பாகம் அச்சாகிறது.

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்

(((ரஹ்மத் பாகவி)))

## தொழுகையை முடித்துக்கொண்ட பின், ஸுன்னத்தான 'வலீபா, விர்து, துஆ ஓதுவது பற்றிய ஹதீதுகள்

* இமாம் சாஹிப் தொழுகையை முடித்து ஸலாம் கூறித் திரும்பியானதும், வலது புறமுள்ள முக்ததிகளேயோ, இடது புறமுள்ள முக்ததிகளேயோ முன்னேக்கியவராக முகம் திரும்பி உட்கார்ந்து கொள்ள வேண்டும்.

|| இமாம், ஸலாம் கூறித் திரும்பியதும், மூன்று முறை சப்தமிட்டு "அஸ்தக்பிருல்லாஹ்" என்று சொல்லி, பிறகு கீழ்க்கண்ட துஆக்களில் இஷ்டமான எதையும் ஓதலாம்:—

**1-வது துஆ:** அல்லாஹும்ம அன்தஸ் ஸலாம், வமின்கஸ் ஸலாம், தபாரக்த யாதல் ஜலாலி வல் இக்ராம்.

**(கருத்து):** எங்கள் இறைவனே, நீ சாந்திமயமானவன்; உன்னிடமிருந்தே சாந்தி உண்டாகிறது. ஏ மகத்துவம் உடையவனே, மன்னிக்கும் தன்மையுடையவனே, நீயே மகா பரக்கத் உடையவனுவாய்.

† **2-வது துஆ:** லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர்; அல்லாஹும்ம லாமானிஅ லிமா அஃதைத்த வலா முஃதிய லிமா மனஃத வலா யன்பஉ தல்ஜத்தி மின்கல் ஜத்து.

**(கருத்து):** வணக்கத்துக் குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவனுக்கு இணையானவர் யாருமில்லை. சகல ராஜ்யங்களும் அவனுக்கே உரியதாகும். புகழ் அனைத்தும் அவனுக்கே உரிய தாகும். அவன் சகல வஸ்துகளின் மீதும் மகா சக்தியுடையவனுக இருக்கின்றான்...ஏ எங்கள் இறைவனே, நீ அருள் புரிந்தளித்தால் அதை தடுத்து விடுவார் யாருமில்லை; நீ தடுத்து நிறுத்திக் கொண்டால், அதை மீறி அளிக்க வல்லாரும் யாருமில்லை.

---

* புகாரி -

|| முஸ்லிம், மிஷ்காத்.

† ஸஹீஹைன், மிஷ்காத்

உன்னிடமிருந்து கோபம் உண்டா யிருக்குங்கால், எந்த தனவந்த னுடைய தனமும் அவனுக்குப் பிரயோஜனம் தரமாட்டாது.

× 3-வது துஆ: அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக்க, மினல் ஜுப்னி, வ அவூது பிக மினல் புக்லி, வ அவூது பிக்க மின் அன் உரத்த இலா அர்த்தலில் உம்ரி, வ அவூது பிக்க மின் பித்னத்தித் துன்யா வ அதாபில் கப்ரி

(கருத்து): "இறைவனே! இயலாமையை விட்டு நிச்சயமாக யான் உன்னிடம் பாதுகாப்பு வேண்டிக் கொள்கிறேன். லோபித் தனத்தை விட்டும் நான் உன்னிடம் பாதுகாப்பு வேண்டிக் கொள்கி றேன்...இன்னும் உலகத்தின் குழப்பத்தை விட்டும், கப்ருக் குழியின் கஷ்டத்தை விட்டும் நான் உன்னிடம் பாதுகாப்பு வேண்டிக் கொள் கிறேன்".

‡ 4-வது துஆ: அல்லாஹும்ம அஇனீ அலா திக்ரிக்க வஷுக் ரிக்க வஹுஸ்னி இபாதத்திக

(கருத்து): "இறைவனே, உன்னை நான் தியானிப்பதின் பேரிலும், உனக்கு நன்றி செலுத்துவதின் பேரிலும், உன்னை அழ கான விதமாய் நான் வணக்கம் புரிவதின் பேரிலும் நீ எனக்கு நல் உதவி புரிவாயாக".

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தோழர் மஆத் இப்னு ஜபலை நோக்கி, 'மஆதே, நீவிர் ஒவ்வொரு பர்ளுத் தொழுகைக்குப் பிறகும் (பின் வரும்) இந்த துஆவை அவசியம் ஓதுவீராக—என்று வஸிய்யத்து செய்திருந்தார்கள். அதாவது:—

† 5-வது துஆ: அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக்க மின் ஜவாலி நிஃமத்திக, வதஹவ்வுலி ஆபியதிக, வபஜாஇ நிக்மத்திக்க வஜமீஇ ஸக்திக்க

(கருத்து): "இறைவனே, உன்னுடைய அருட் பாக்கியம் என்னை விட்டு, நீங்கிப் போவதை விட்டு பாதுகாப்பு வேண்டிக் கொள்கிறேன். உன்னாலான சுக சௌக்கியம் மாறிப் போவதை விட்டும் உன்னுடைய தண்டனை திடீரென்று வருவதை விட்டும், உனக்கு அதிருப்தியானவைகளை விட்டும் நான் உன்னிடம் பாதுகாப்பு வேண் டிக் கொள்ளுகிறேன்". (தொடரும்)

---

× புகாரி, மிஷ்காத்
‡ புலூகுல் மராம்
† புலூகுல் மராம்

18068

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# இரத்தச் சின்னம்

**இது திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த ஒரு துப்பறியும் நாவல்.**

சிரச்சேதம் செய்யப்படுவதினின்று சீர்கெட்ட குற்றவாளி ஒருவன் தற்செயலாகத் தப்பிப் பிழைத்திராவிடில், இரத்தச் சின்னம் என்னும் இரகசியக் குழு இயங்கத் துவங்கி இராது. நீதி பரிபாலனத்தில் பரிதவிக்கத் தக்க முறையில் நிகழ்ந்த இந்த அசம்பா விதத்துக்குச் சில வருடங்களுக்குப் பிறகு இரக்க சிந்தையற்றவ னொருவன் இங்கிலாந்தில் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடலானுன். நீர்க்க ஆலோசித்து திட்டமிட்டுத் திறமையோடும் தீரத்தோடும் செயலாற்றுவதன் மூலம் தனக்கு உதவியாளர்களாக ஏராளமான ஆட்களைச் சேகரித்துக் கொண்டான் அவன். ஒருவருக்கொருவர் பரஸ்பர பழக்க மில்லாமலும் அறிமுக மில்லாமலும் அதியற்புதச் செயல்கள் புரிந்த இந்த இரகசியக் குழுவிற்குத் தலைமை தாங்கிய மர்ம மனிதன் இரத்தச் சின்னம் என்று கையெழுத்திட்டான்.

அவனின் மர்ம இரகசியத்தைக் கண்டு பிடித்தல் மிக ஆச்சரியமானது.

இதன் விலை ரூ. 1–28

தற்கலை பீர் முஹம்மது ஒலியுல்லா
அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

# ஞானக் கோர்வை

இதில் மேற்படி ஒலி நாயகமவர்கள் அருளிய பிஸ்மில் குறம், ஞானப் பால், ஞானப்பூட்டு, ஞானப் புகழ்ச்சி, ஞான மணிமாலை, ஞானக்குறம், ஞானரத்தின குறவஞ்சி, ஞான ஆனந்தக் களிப்பு, திரு மெஞ்ஞான சரநூல், ஞான முச்சுடர்ப் பதிகம் முதலியன அடங்கி யிருக்கின்றன.

கலிகோ பைண்டு விலை ரூ. 3 – 80

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.**

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
அவர்களின் அருமைப் புதல்வியாகிய

# பாத்திமா நாயகி (ரலி) ஜீவிய சரித்திரம்

இச்சரித்திரத்தில் ஹஜ்றத் பாத்திமா நாயகி அவர்களின் மாதாவாகிய உம்முல் முஃமினீன் கதீஜா நாயகி அவர்களின் வம்ச பரம்பரையும், அவர்களின் பிறப்பும், பாத்திமா நாயகியின் பிறப்பும், பால்யகால அறிவும், பரஸ்பர அன்பும், நாயகியின் திருக்கலியாணமும், அவர் தம் வீட்டில் குடித்தனம் நடத்தி வந்த ஒழுங்கும், தனது பர்த்தாவாகிய அலியாருக்கு இணங்கி நடந்த அழகும், அவர்களின் தயாள சிந்தையும், உழைப்பும், ஆண்டவன் மீது பக்தியும், வணக்கமும், கபூலாக்கப்பட்ட துஆவும், ரஸூலுல்லாவுக்கு பாத்திமா நாயகியின் பால் இருந்து வந்த அன்பும், நாயகிக்கு தம் தந்தையின் பால் இருந்து வந்த பிரியமும் அவர்களின் நாணம் அடக்கம், அச்சம் முதலிய ஒழுக்கங்களும், இமாம் ஹஸன் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் மேம்பாடும், நாயகியின் வபாத்தும் விபரமாய்க் கூறப்பட்டிருப்பதுடன் இந்நாயகியின் ஜீவிய சரித்திரத்தில் நம் சகோதர சகோதரிகளுக்கு அரிய போதனைகளும் அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு முஸ்லிமும் இச்சரிதையை வாசித்துணர வேண்டியது மிக்க அவசியமாகும். கிளேஸ் காகிதம்.

இதன் விலை ரூ. 1-60

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 3-00

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.**

நெ. 20 ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.